சரஸ்வதி

ஆசிரியர். வ. விஜயபாஸ்கரன்



இலக்கிய மாத இதழ். 2 அணா

சரஸ்வதி

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம் —பாரதி.

மலர் 2
இதழ் 1

ஜனவரி 1956

மன்மத
மார்கழி

துயர் துடைக்க வாரீர்!

தமிழகத்தை மீண்டும் ஒரு புயல் தாக்கியிருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஒருமுறை புயல் வீசியது. தஞ்சை ஜில்லாவில் பெருத்த நாசத்தை ஏற்படுத்திவிட்டுச் சென்றது. இம்முறை புயல்மட்டும் அடிக்கவில்லை; புயலுடன் பெருமழையும் சேர்ந்து அடித்தது. கடல் கொந்தளித்து ஊர்களுக்குள் புகுந்தது. இயற்கையின் இந்தக் கோரத் தாக்குதலுக்கு தஞ்சை, ராமநாதபுரம் ஜில்லாக்கள் பலியாயிருக்கின்றன. உயிருக்கும், உடைமைக்கும் ஏற்பட்டுள்ள நஷ்டம் கணக்குக்கு அடங்காதது. மக்கள் விவரிக்கமுடியாத கஷ்டத்திற்கு உட்பட்டு வருந்துகின்றனர்.

சொத்து சுகங்களை இழந்து நிராதரவாக வாடும் சகோதரர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவர்களின் துயரத்தைத் துடைக்க அரசாங்கமும் பொதுமக்களும் எடுத்துள்ளமுயற்சிகளைப் பாராட்டுகிறோம்.

வாழ்விழந்துநிற்கும் மக்களுக்கு புனர்வாழ்வை அளிக்க அரசாங்கம் சகல முயற்சிகளையும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஏற்பட்டுள்ள நஷ்டமோ ஏராளம்; இதுவரை நாம் அளித்துள்ள உதவிகள் இந்த நஷ்டத்தை முழுக்க ஈடுகட்ட முடியாது. ஆகவே இன்னும் அதிகமாக உதவி அளிக்கவேண்டும். இது நமது கடமை. கடமையை நிறைவேற்ற மக்கள் தயங்கமாட்டார்கள் என்பதில் நமக்குப் பரிபூரண நம்பிக்கை உண்டு.

வருக! வருக!

புதிய சீனத்தின் உதவி ஜனாதிபதி திருமதி சுங் சிங் லிங் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். இவர் சீனப் புரட்சியின் முன்னோடியான சன்யாட் சென் அவர்களின் மனைவியார். சன்யாட் சென் காலமான பிறகு அவர் விட்டுச் சென்ற பாதையில் தொடர்ந்து செல்பவர்.

திருமதி சன்யாட் சென் இந்திய மக்களின் நண்பர். நாம் சுதந்தரத்துக்காகப் போராடிய காலத்தில் நமக்கு உறுதுணையாக நின்றவர். பிரிட்டிஷ் அரசாங்கம் இவர் இந்தியாவுக்கு வருவதைத் தடுத்து வந்தனர். இன்று சுதந்திர இந்தியாவுக்கு நவசீனத்தின் பிரதிநிதியாக வந்திருக்கிறார். தமிழ் மக்களின் சார்பில் நல்வரவு கூறுகிறோம். இவரின் வருகை இந்திய-சீன நட்புறவுக்கு மேலும் உரமளிக்கும்.

பாராட்டுகிறோம்

நடிப்புக் கலையால் நாட்டுக்குச் சேவை செய்வதில் முன்னணியில் நிற்கும் கலைஞர்களில் திரு. என்.எஸ். கிருஷ்ணன் குறிப்பிடத் தகுந்தவர். சமீபத்தில் சென்னையில் தென்னிந்திய நடிகர் சங்கம் கலைவாணர் திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கவுரவித்தது.

டி. கே. எஸ். சகோதரர்கள் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமானவர்கள். தங்கள் நாடகங்கள் மூலமாக, நசித்து வரும் தமிழ் நாடக உலகுக்கு புத்துயிர் ஊட்டியவர்களில் முதன்மையானவர்கள். புதுப் புது முறைகளையும் கருத்துக்களையும் கையாண்டு நாடகக் கலையை வளர்த்து வருபவர்கள்.

சென்னை, பாரத் பைன் ஆர்ட்ஸ் சபையார் டி. கே. எஸ். சகோதரர்களுக்குச் சமீபத்தில் பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தனர்.

என். எஸ். கிருஷ்ணன். டி. கே. எஸ். சகோதரர்களைக் கவுரவித்ததின் மூலம் தென்னிந்திய நடிகர் சங்கமும், பாரத் பைன் ஆர்ட்ஸ் சபையும் தமிழகமும் தங்களுக்கே பெருமை தேடிக் கொண்டன.

கலாச்சாரத் தூதுகோஷ்டி

சென்னையில் உஸ்பெக் கலாசாரத் தூதுகோஷ்டி ஜனவரி மாதம் 10, 11, 12 தேதிகளில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப் போகின்றனர். இவர்களது வரவு இந்திய-சோவியத் நட்புறவை மேலும் பலப்படுத்தும். உஸ்பெக்கிஸ்தான் கலாச்சார தூதுகோஷ்டியின் நிகழ்ச்சிகளை மக்கள் எல்லோரும் கண்டு களிப்பதற்காக குறைவான கட்டணங்களே விதிப்பதாக விழாக் கமிட்டியினர் அறிவிக்கின்றனர். விழாக் கமிட்டியினரின் இந்த முடிவை வரவேற்கிறோம். சென்னை மக்கள் ஆயிரக் கணக்கில் திரண்டு விழாவைச் சிறப்பிக்க வேண்டுமென்று கோருகிறோம்.

புதுமைப்பித்தன்

(2)

ஆர். கே. கண்ணன்

மொழிக்கு ஒரு கட்டுப்பாடு உண்டு, அது இலக்கணம்; இசைக்கு ஒரு கட்டுப்பாடு உண்டு, அது தாளம்; அனுபவத்துக்கும் அறிவுக்கும் ஒரு கட்டுப்பாடு உண்டு, அது தத்துவ தரிசனம்; இயற்கைக்கு ஒரு கட்டுப்பாடு உண்டு, அது அதன் இயக்க விதி; சமுதாயத்துக்கு ஒரு கட்டுப்பாடு உண்டு, அது அதன் உற்பத்திமுறை விதி.

அந்தந்தக் கட்டுப்பாட்டின் வரம்புக்குள், எடுத்துக்கொண்ட விஷயத்தைத் திரட்டித் தேக்கி ஒருவழியில் செலுத்தினால் அதற்கு உயிர்ப்பும், வலிமையும், வளர்ச்சிக்குரிய வாய்ப்பும் கிடைக்கிறது. அதற்குள் நின்று இயங்கினால் அவ்விஷயமும் வளரும், அதன் வளர்ச்சிக்குத்தக்கமாதிரி அந்தக் கட்டுப்பாடும் வளரும், விரிவடையும். மாறுதல்கள் ஏற்பட்டால் அவை இந்தக் கட்டுப்பாட்டை அடியோடு தலைகுப்புற கவிழ்க்காது. அதற்குப் பதிலாக தேவையற்ற அம்சங்களை—காலத்தால் பழுதடைந்ததை—நீக்கி, தேவையான அம்சங்களைச் சேர்க்கின்றன. இந்த விதிகளை, இந்தக் கட்டுப்பாடுகளை, அடியோடு ஒழிப்பது என்பது யாருக்கும் சாத்தியமில்லை.

சமுதாயம் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்வது எதற்காக? வளர்ச்சியடைவதற்காக முன்னேறுவதற்காக. இந்தக் கட்டுப்பாடு எங்கிருந்து கிளம்புகிறது? சமுதாயத்தின் மத்தியிலிருந்தே. "மேலிருந்து" யாரும் சுமத்தவில்லை; சுமத்த முடியாது. சமுதாயத்துக்குள்ளிருந்தே இயங்கி வெளிவரும் இதை, யாராவது ஒருவன் கண்டுபிடித்து முறைப்படுத்தி வரையறுத்துச் சொல்கிறான். அதைச் சமுதாயம் செயல்முறையில் நடத்திக்காட்டுகிறது. சமுதாயத்தினிடையேயிருந்து எழாத, சமுதாயத்துக்கு ஒவ்வாத, காலாவதியாகிவிட்ட பின்னரும் மேலிருந்து திணிக்கப்படும், கட்டுப்பாடுகள் அனைத்தும் சமுதாயத்தால் கவிழ்க்கப்படுகின்றன. ஏற்று நடத்தப்படுவதில்லை.

எல்லாவற்றிற்கும் இயல்பாய் விதி இப்படியிருக்க, அந்தச் சமுதாயத்தின் வாழ்விலும் வளர்ச்சிப்போக்கிலும் பிறக்கும் கலை இலக்கியம் மட்டும் அந்த விதிக்கு விலக்கா? வாழ்விலிருந்து வேறுபட்டு, ஒதுங்கி

நின்று, அவை தனியே இயங்க முடியாதல்லவா ?

ஆகவேதான், சமுதாயக் கண்கொண்டு இலக்கியத்தைச்சிருஷ்டிப்பதும், இரசிப்பதும் நமது வேலை என்கிறோம்.

புதுமைப்பித்தனின் இலக்கிய-சமுதாயப் போக்கையும், இலக்கிய சிருஷ்டிகளின் தன்மையையும் சென்ற இதழ்க் கட்டுரையில் சுருக்கமாக வரையறுத்து விமர்சித்தேன்.

இப்பொழுது அக் கருத்துக்களை விளக்குவோம்.

நூற்றுக்கணக்கான சிறு கதைகளைப் படைத்தார் புதுமைப்பித்தன். சிறு கதையின் தன்மையையும், இலக்கணத்தையும் ஞாபகப் படுத்திக்கொள்ளும் பொழுது, ஒவ்வொரு சிறுகதையும் தான் எடுத்துக்கொண்ட விஷயத்தை ஒரே முழுமையாக சித்திரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு ஆகாது. அதோடுகூட, அத்தனை சிறு கதைகளையும் வரிசைப்படுத்தி அவற்றில் ஒருமையைக் கண்டால், முழுமையைக் கண்டால், தப்பில்லை. ஏனெனில் இச் சிறுகதைகள் அனைத்தும் சேர்ந்து ஒரு உலகத்தை நம்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன. ஆகவே, நமது வேலை, இக்கதைகள் பூராவும் சித்திரிக்கும் ஒரு முழுமையான உலகத்துக்கும், பிரத்தியட்ச வாழ்வு என்கிற உலகத்துக்கும் உள்ள தொடர்பைச் சுட்டிக்காட்டி விமர்சிப்பதே.

அப்படிச் செய்கிற காலத்தில் எல்லா கதைகளையும் ஒவ்வொன்ருக எடுத்துக்கொண்டு பரிசீலித்து விமர்சிப்பது என்பது—இங்கு, இப்பொழுது—சாத்தியமில்லை.

அவரது இலக்கிய பாதையில் குறிப்பிடத்தக்க மைல்கற்களாக விளங்கும் சில சிறுகதைகளை மட்டும் எடுத்துக்கொண்டு பார்ப்போம். அவரது இலக்கிய-சமுதாயக் கண்ணோட்டத்தை, எல்லோரும் காணும்படியாக, விளக்கி விளம்பரப்படுத்தும் சில சிறுகதைகளை மட்டும் இங்கு எடுத்துக்கொள்ளலாம்.

இலக்கியத் துறையில் புதுமைப்பித்தனின் இயற்கைவாதப் போக்கு ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் எழுந்தது, ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பயன்பட்டது என்றும் முன்பே சொன்னேன். அது அவரை மாயாவாதத்தில் கொண்டுபோய் விட்டது என்றும் சொன்னேன்.

இந்தப் போக்கின் வளர்ச்சி ஒரு நேர்கோடான வளர்ச்சியில்லை. அதற்கு ஒரு மேல் மட்டமும் கீழ்மட்டமும் உண்டு.

முதலில், அதன் வளர்ச்சியின் மிக உயர்ந்த, மிகச்சிறந்த மட்டத்திலிருந்து ஆரம்பிக்கிறேன்.

" நாசகாரக் கும்பல் " என்கிற கதை. புதுமைப்பித்தனின் இயற்கைவாதப் போக்கின் சிகரம் இது. யதார்த்தவாத இலக்கிய எல்லையைத் தொடுமளவுக்குத் தாவிச் சென்று, எட்டாமலே நின்றுவிட்ட கதை இது. இந்தக் கதையில் புதுமைப்பித்தன் சாதிக்கும் இலக்கிய-சமுதாயப் பார்வையின் வீச்சு இருக்கிறதே, அது

வேறெந்தக் கதையிலும் அதற்கு முன்போ பின்போ சாதிக்கவேயில்லை.

"நாசகாரக் கும்பல்" என்னும் கதை நிலப்பிரபுத்துவக் கொடுமையின்கீழ் அவதிப்படும் ஒரு கிராமத்தைப் படம்பிடித்துக் காட்டும் கதை. நிலத்தை மட்டும் அல்லாமல், கிராம சமுதாயம் பூராவின் வாழ்வையும் தனது மரணப்பிடியில் வைத்துக்கொண்டு ஒரு நிலப்பிரபுத்துவப் பண்ணையார் இரண்ய தர்பார் நடத்திவருகிறார். இதற்கிடையே, அந்தக் கிராமத்தில் க்ஷவரத் தொழில் செய்யும் குடிமகன் மருதப்பன் இலங்கைக்குச் சென்று க்ஷவரத் தொழிலில் ஈடுபடுகிறான். சொந்தக் கிராமத்துக்குத் திரும்பும்போது ரொக்கமாக ஐயாயிரம் ரூபாய் பணமும், கிராமத்தில் மூன்று கோட்டை நன்செய் நிலமும், கொழும்பு சலூனில் வாரிசாக அவர் மகனும் இருக்கிறார்கள்.

வழக்கம்போல் நிலம் வாங்குவதில் தகராறு. மருதப்பன் வாங்க நினைத்த நிலத்தை இரவோடிரவாக இரகசியமாக—அதுதான் கிராமத்தில் வழக்கமாச்சே—பண்ணையார் கொத்திக்கொண்டுபோகிறார். பணபலமுள்ள மருதப்பனுக்கு வஞ்சம் தீர்க்கவேண்டுமென்ற கட்டுக்கடங்காத ஆவல். 'பிள்ளைமார்' கொட்டத்தை எப்படியாவது அடக்கவேண்டும். சமயம் வருமா என்று பார்த்துக்கொண்டிருக்கிறான். பண்ணையார் மனைவி இறந்துவிடுகிறாள். வந்ததடா சமயம் என்று மருதப்பன் நினைக்கிறான். தனக்குக் கடன்பட்டிருந்த மாடசாமியை நிர்ப்பந்தித்துத் தூண்டிவிட்டு, சவச் சடங்கின்போது சங்கு ஊத மறுக்கும்படி செய்துவிடுகிறான். பண்ணையாரும் அவரது கணங்களும் பிள்ளைமார் சாதிக்கே விடுத்த சவாலாக அதைக்கருதி, "நாசவப் பயல்களுக்கு" புத்தி கற்பிக்க முற்படுகிறார்கள். மாடசாமியையும் மருதப்பனையும் தூணிலே கட்டி புளியமிலாறினால் முழங்காலிலும், முதுகிலும் மாறிமாறிப் பிரயோகிக்கிறார் பண்ணையார்.

மாடசாமி வலிபொறுக்கமாட்டாமல் குய்யோ முறையோவென்று கத்துகிறான்.

அடிபடுகிற மருதப்பன் வீறிடுவதைக் கேளுங்கள் :

"பிள்ளைமாருன்னு என்ன கொம்பு மொளச்சிருக்கா,—பிரிட்டிஷ் ரஜ்சியமா என்ன? ரொம்ப உறுக்கிறஹளே! மனிசனைக் கட்டிப்போட்டு அடிக்கதுன்னு நாய அநியாய மில்லியா,... இண்ணிக்கி சிரிக்கிரவுஹ நாளைக்கி வாரதையும் நினைச்சுப்பார்க்கணும்" என்கிறான் மருதப்பன்.

பண்ணையார் பதில் இதோ :

"நாசுவப் பயலா காரியமாத் தெரியலெயே; வேலாண்டி, அவன் மொளியை (முழங்காலை)ப் பேத்துக் கையிலே குடு! அவனுக்குக் குடுக்கிற கொடையிலே இவன் சங்கெத் தூக்கணும்; என்ன பாத்துக்கிட்டு நிக்கே?"

வேலாண்டி யடிக்கிறான், குத்துகிறான்; மருதப்பன் முன் பல் இரண்டும் விழுந்துவிட்டன.

பீதியடைந்த மாடசாமி சங்கு எடுத்து ஊதத் தொடங்குகிருன்.

பண்ணையார் 'சாமியாட்டம்' பின்வரும் வசனங்களில் முடிகிறது :

—"சவத்தை அவுத்து விடுடா! இந்தத் தெசேலே தலைவச்சிப் படுத்தா மாறுகால் மாறுகை வாங்கிப் போடுவேன், ஓடிப்போ நாயே!"

—"போலீசுக்குக் கீலீசுக்கு எட்டுச்சுன்னு அவன் (மருதப்பன்) தலை அவன் களுத்தில் இருக்காது!" என்கிருர்.

பிறகு, "அவிழ்த்துவிடப்பட்ட மருதப்பன் மனைவியின் கைத் தாங்கலில் நொண்டிக்கொண்டே தூரத்தில் சென்று ஒரு பிடி மண் எடுத்து வானத்தில் எறிந்து, "இப்படி சுட்டமண்ணுப் போகணும்! என் வயிரெறியருப்லே போகணும்" என்று ஏசல் அழுகையுடன் கூவிவிட்டுச் சென்ருன்."

கதையின் முடிவென்ன? மருதப்பன் இஸ்லாம் மதத்தைத் தழுவி, ஒரு பணக்கார மரைக்காயரின் கடையில் மானேஜரா யிருக்கக் கொழும்புக்குப் போய் விடுகிருன். தகராறுக்குக் காரணமாய் இருந்த நிலத்தைப் பண்ணையார் வாங்குவதற்கு முன்பே அதன் சொந்தக்காரன் இரகசியமாக இந்த மரைக்காயருக்கு அடமானம் வைத்து விட்டானும். ஆக மரைக்காயருக்கும், பண்ணையாருக்கும் லடாய். "கோர்ட்டு இருக்கே, நடத்திப் பார்ப்போமே!" என்று மரைக்காயருக்குப் பண்ணையார் சாவதானமாகச் சவால் விடுவதுடன் கதை முடிவடைகிறது.

நாசகாரக் கும்பல்! நாசமாய்ப் போக! என்று சபிக்க நம் வாய் துடிக்கிறது. இது இக் கதையின் சிறந்த அம்சம். மிகத் திறமையுடன், அமைதி நிறைந்த வேகத்துடன், சதை துடிதுடிக்க இரத்தங் கொதிக்க, கதை ஓடி முடிவடைகிறது. எவ்வளவுக் கெவ்வளவு அமைதியுடன் விஷயம் அமைகிறதே, அவ்வளவுக் கவ்வளவு வலிமை கூடுகிறது. நாசகாரக் கும்பலின் பிடியில் சிக்கித் துடிதுடிக்கும் கிராமம் கண்ணெதிரே நிற்கிறது. வாஸ்தவம். நிலப் பிரபுத்துவத்தின்மீது இருக்கும் வெஞ்சினம் என்கிற அனல் காற்று வீசி யடித்து நம்மைத் தகிக்கும் போலிருக்கிறது......

நெருங்கிப் பார்ப்போம்! கிராம வாழ்க்கையை, அதன் சலனத்தில், ஓட்டத்தில், ஒரு சிறு சுழற்சியில் புதுமைப்பித்தன் சித்திரித்துக் காட்டுகிருர்.

இதை ஏன் யதார்த்த வாதம் இல்லை என்று மறுக்க வேண்டும்? யதார்த்த வாதத்தைத் தொடு மளவுக்குச் சென்று, தொடாது நின்று விட்ட இயற்கை வாதம் என்று ஏன் கூறவேண்டும்?

கதையின் உள்ளடக்கமும், கதை யுண்டாக்கும் மனேபாவமும், வாழ்வின் அடியாழத்தை இக்கதை எந்த அளவுக்கு ஆழம் பார்க்கிறது என்கிற விஷயமும்,

இங்கே கவனிக்கத் தக்கன. கதை யெழுதப்பட்ட காலத்தை நினைவில் வைத்தே, பார்ப் போம்.

கதை எழுதியது 1936-ம் ஆண்டில். சட்ட சபை தேர்தல் காலம். நாடெங்கும் நேருவின் சூருவளிப் பிரச்சாரம்—அசுர சாதனை என்று அன்றைய உல கைப் பிரமிக்கச் செய்தது. காங் கிரஸ், கம்யூனிஸ்ட், சோஷ லிஸ்ட் என்ற வித்யாசமில்லா மல் எல்லோரும் மக்களைத் தட்டி யெழுப்பிய காலம். ஜஸ்டிஸ் கட்சியின் நிலப்பிரபுத்துவத் தூண்கள் சடசடவென்று முறிந்து விழப் போகிற சமயம். சாதி யுணர்ச்சி, மத வேறு பாடு, பண பலம், நிலப் பிரபுத் துவச் செல்வாக்கு, பிரிட்டிஷ் ஆட்சியின் எதிர்ப்பு, புதுக் கோட்டை ராஜாவின் சலசலப்பு —அத்தனைக்கும் ஈடு கொடுத்து மக்கள் முன்னேறிய காலம். காலவெள்ளத்தைக் கண்டு மிரண்டு போய் டாக்டர் சுப்பரா யன் போன்ற தூண்களே காங் கிரசில் தஞ்சம் புக வேண்டியேற் பட்ட காலம். உழைப்பாளி மக்க ளின் எழுச்சியிலே ஜஸ்டிஸ் கட்சி உருண்டது. உயிர் போனது போனது தான், பிறகு அது மீளவே யில்லை. அந்த மகத் தான போரிலும் வெற்றியிலும் அன்று மக்களுக்கு ஏற்பட்ட தன் னம்பிக்கை, உற்சாகம், அரசியல் விழிப்பு எல்லாவற்றையும் ஞாப கப்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்த யதார்த்த நிலைக்கு ஒப் பிடுகிற மாதிரி கதையில் ஒரு தொலைதூர எதிரொலி கூடக் கேட்கவில்லை.

கிராம வாழ்க்கை காட்டப்படு கிறது. எப்படிப்பட்ட கிராம வாழ்க்கை?

ஒரு பக்கத்தில் செய லுள்ள, செருக்கு மிகுந்த நிலப்பிரபுத்துவக் கொடுங் கோலன். இன்னொரு பக்கத் தில், அந்தப் பண்ணையாரை எதிர்ப்பவன்—ரொக்கமும், நில மும் படைத்து, மேலும் நிலம் வாங்க வழிபார்த்த மருதப்பன். இவைதான் இரண்டு கட்சிகள் அங்கே. சண்டை என்னமோ நிலத்திற்காகத்தான். ஆனல் சண்டையிடுபவர்கள், பழைய பண்ணையும், புதிய பணக்கார ரும்,—உழைப்பாளி மக்கள் அல்ல. அதிலும் சண்டை எந்த ரூபத்தில்? பிள்ளைமார்—மறவர் சாதிப் பூசலாக, சங்கூத மறுத்த பிரச்சினையையொட்டி! நிலத் தகராறு தலையெடுக்காத வரையி லும் மருதப்பன் "இழிந்த சாதிக் காரன்" என்று கூறமுடியாதபடி பார்த்துக்கொள்கிருன். பிள்ளை மார் கூட்டமும் சமத்காரமாக எதிலும் பட்டுக் கொள்ளாமல் மருதப்பனிடம் நடந்து கொள் கிறது. காரணம், மருதப்பனின் பண பலம். ஆனல், நிலத் தக ராறு வந்தவுடன் மருதப்பன் சாதி பெயரால் மறவர்களுக்கு ரோஷ மூட்டப் பார்க்கிருன். அதுமட்டுமல்ல; தன்னிடம் கடன்பட்டிருக்கும் ஒருவனை, மாடசாமியை, நிர்ப்பந்தித்து ஏவுகிருன், பண்ணையார் மீது.

மாடசாமி-அசல் உழைப்பாளி,

அசல் குடிமகன், அசல் ஏழை—மருதப்பனின் கருவி. அவ்வளவே. அவனுக்கு என்று உணர்வோ, உணர்ச்சியோ, ஆசையபிலாஷைகளோ, எதுவும் கிடையாது. முதுகில் அடி விழும்பொழுது குய்யோ முறையோ என்று கத்திவிட்டு, அப்புறம் மரண பீதியில் சங்கெடுத்து ஊதவேண்டியதுதான் அவன் வேலை. அவன் பிறத்தியாரின் கைப்பாவை — பயந்த மனிதன், விழிப்படையாத ஏழை மக்களின் பிரதிநிதி.

வாழ்க்கையிலோ? இதே மாடசாமிகள் தாம் ஜஸ்டிஸ் கட்சியை வழித்தெறிந்தார்கள், கதை வெளிவந்த ஓரிரண்டு மாதங்களில்! எத்தனையோ பண்ணையார்களின் பணத்துக்கும், புளியமிலாறுகளுக்கும், சாதி துவேஷ தூபங்களுக்கும், இதர நிர்ப்பந்தங்களுக்கும், ஈடுகொடுத்துக் கொண்டு இதே மாடசாமிகள் தான்வோட்டுச்சாவடிக்குஅன்று போய் வாகை சூடினர். பின்னர் கிளர்ந்தனர். கடன் ஒத்திவைப்புச் சட்டம் வந்தது. ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் வந்தது. ஸ்தாபனரீதியில் விவசாயிகள் இயங்கினர். தஞ்சை தலைமை வகித்து முன்னே சென்றது. நெல்லையும் நகர்ந்தது......1948 வரையிலும் சரித்திரப்போக்கைப் பாருங்களேன்!

ஆனால், இந்தப் கதையிலும் மாடசாமிகளுக்கு உரிமை வேட்கையோ, மானமோ, இல்லை. வேறெந்தக் கதையிலும் கிடையாது.

உதை வாங்கிய மாடசாமி மரணபீதியில் சங்கெடுத்து ஊதிக்கொண்டே மயானத்தை நோக்கி நடந்தவன், நடந்தவன்தான். மீண்டும் புதுமைப்பித்தனின் இலக்கியத்தில் புகவேயில்லை.

என்ன காரணம்? புதுமைப்பித்தன் கிராமத்தை பண்ணையார்—மருதப்பன் கண்கொண்டு பார்த்ததுதான். எனவே அவர்களின் அனுபவத்தின் மட்டத்திற்குக் கீழே சென்று சமுதாயத்தின் அடியாழத்தைத் தொட்டுத் தடவ முடியவில்லை. கலைஞனின் பாதாளக்கரண்டி வாழ்வின் அடியாழத்தைத் துழாவவேயில்லை. ஆகையால் நிலப்பிரச்னை பணக்காரர்களிடையே மூளும் சண்டையாக மட்டும் தெரிந்தது. சண்டையும்கூட, பிள்ளைமார்—மறவர் சாதிச் சண்டையாக உருவம் தாங்கியது பின்னர் ஹிந்து—முஸ்லீம் மதச் சண்டையாக மாறுமோ பண்ணையார்—மரைக்காயர் சண்டை, என்றுகிவிட்டது! மருதப்பன் இஸ்லாத்தில் சேர்ந்துவிடுகிருன்.

இந்த நாசகாரக் கும்பலின் அட்டகாசங்களுக்கிடையே மாடசாமிகளின் முதுகுத் தோல் உறிக்கப்படும், மாறுகால் மாறுகை வாங்கப்படும். மருதப்பனுல் தூண்டப்பட்டு மாடசாமி உதை வாங்குவான். பண்ணையாரால் உத்திரவிடப்பட்டு வேலாண்டி உதை கொடுப்பான். மாடசாமியும், வேலாண்டியும் பிறத்தியாரின் கருவிகள். இந்தக் கும்பலுக்குப் பணிசெய்து கிடப்பதே அவர்கள் கடன். ஆகவே, கிராம வாழ்வில், நிலப்பிரச்சினை

யில், எந்தவித உணர்ச்சிகளும், உணர்வும், சுயேச்சையாக அவர்கள் வைத்துக்கொள்ள வில்லை.

இயங்கிவருகிற கிராமத்தை புதுமைப்பித்தன் படம் பிடித்தார். ஆனால் அந்த இயக்கத்துக்கு, கிராம சமுதாயத்தில் ஏற்பட்ட சலனங்களுக்கு, ஒரு வளர்ச்சியும் உண்டு. அந்த வளர்ச்சியைச் சாதிப்பவர்கள், பிரத்யட்ச வாழ்வில், நமது மாடசாமிகளும், வேலாண்டிகளும்! இந்த வளர்ச்சி பெற்று வரும் அம்சத்தைப் புதுமைப்பித்தன் காட்டவில்லை. இதையும் சேர்த்துக் காட்டினால் தான் (கிராம) வாழ்வை முழுமையாகப் பிரதிபலிக்கமுடியும் உண்மையாக 1936லிருந்த ஒரு கிராமத்தை யதார்த்தவாத ரீதியில் சித்திரித்துக் காட்டியதாகக் கருதமுடியும்.

இன்னின்ன தத்துவம், இன்னின்ன கட்சி, இன்னின்ன கொடி, இன்னின்ன கோஷம் வைத்துக்கொண்டுதான் கலைஞன் எழுதவேண்டும் என்று மார்க்ஸிஸ்டுகள் கூறவில்லை. கண்ணெதிரே பார்க்கும் நிகழ்ச்சிகள்; அந்த நிகழ்ச்சிகளின் வளர்ச்சி; அதனூடே சமுதாயம் போராடிக்கொண்டே முன்னேறுவது—இவற்றை உள்ளது உள்ளபடியே (அதில் எந்த ஒரு அம்சத்தையும் மறைக்காமல்) சித்திரித்தால் போதும். அந்த நிகழ்ச்சிகள் பொய்; அந்த வாழ்வு பொய்; அந்த முன்னேற்றம் பொய்—என்றெல்லாம் ஒரு கலைஞன் தன்னைப் பொறுத்த வரையில் மனப்பூர்வமாக நினைக்கலாம். நினைக்க உரிமையுண்டு. அது அவரவர் தத்துவ விசாரம். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் கலைஞன் எதை எதைப் பொய் என்று தான் நினைக்கிறானோ அந்த விஷயங்களை யதார்த்த வாழ்விலுள்ள பண்ணையார் மருதப்பன், மாடசாமி, வேலாண்டிகளின் மீது ஏற்றிச் சொல்லக்கூடாது. ஏன் சொல்லக் கூடாது? நீயார் உத்தரவு போட, என்று கேட்கிறீர்களா? உங்கள் கலைக்கு ஆபத்து வருகிறதே, என்பதினால் தான். உங்கள் கலை சமுதாய முழுவதின், வாழ்வு முழுவதின் உண்மையை பிரதிபலிக்கச் சக்தியற்றுப் போகும்—என்பதினால் தான். பிரத்யட்ச வளர்ச்சியை, முன்னேற்றத்தை, ஓட்டத்தை, உண்மையை, இலக்கியமோ கலையோ முழு ரூபத்தில் பிரதிபலிக்காவிட்டால் அந்த இலக்கியமும், கலையும் வலிவிழந்து சாகும்.

அந்தப் பண்ணையார் கிராமம் உண்மையில்லையா? உண்மை தான். இப்பவும் இம்மாதிரி கிராமங்களில் நடக்கிறதுண்டு. ஆனால் அந்தச் சித்திரம் முழு உண்மையல்ல. மேலும், அதன் ஜீவிய அம்சம் நீக்கப்பட்டு அந்த உண்மை காட்டப்படுகிறது. "கொட்டையடித்த" உண்மையும், அரை உண்மையும் — பொய்க்குச் சமானம்.

ஏன் இப்படிக் கூறுகிறேன்? ஏனெனில் அன்று 1936-ல் முழு உண்மை எது, உயிருள்ள

உண்மை எது? மாடசாமிகளின் விழிப்பும், முயற்சியும், எழுச்சியும், வெற்றியுமே! அதனடிப்படையில் 1933-36க்குப் பிறகு நமது பரத நாட்டியம் செழிக்க வாரம்பித்தது; நமது இசை மறுமலர்ச்சி பெற்றது; நமது மொழி வலுப் பெற்று வளர்ந்தது; நமது சினிமா வேரூன்றிப் படர்ந்தது; நமது இலக்கியம் வளர்ந்தது; நமது நாடகக் கலை வளர்ந்தது. எல்லாமே வளரும் போக்கில் போயின.

உயிருள்ள, முழு உண்மை இது. இலக்கியத்தைப் படைக்கும் பொழுது எல்லா அம்சங்களையும் கூட்டி, (அதன் வளர்ச்சி யம்சங்களை, ஜீவிய அம்சங்களைச் சேர்த்து) ஒரே முழு உண்மையைக் காட்டினுல்தான் இலக்கியம் மனித வாழ்வைப் பிரதிபலிப்பதோடு, மனித வாழ்வை மேம்படுத்தவுங்கூடும்.

விளையும் பயிர் முளையிலே தெரியும்—இது வெகுஜன வாக்கு. வளரும் முளைகளைப் பார்ப்பது விவசாயி வேலை மட்டுமல்ல. கலைஞனுக்கும் அது கடமை. ஏனெனில், வாழ்வும் ஒரு விளையும் பயிர்தானே! அதன் முளைகளைப் பார்க்கவேண்டாமா? அடிமைத்தனத்தின் அந்தகாரத்தில் தான் பாரதி திரிந்தான். என்ருலும், சமுதாயப் பயிரின் வளரும் முளைகளைத் தேடினுன். கண்டு பிடித்தான். அவற்றைப் பேணினுன், போற்றிப் பாடிப் புகழ்ந்தான். அந்த முளைகள் எவை? ஒன்று, சுதந்திரம்; இரண்டு பொதுவுடைமை. அந்தகாரத்திலிருந்து கொண்டே ஆனந்தச் சுதந்திரத்தைப்பற்றிப் பள்ளுப் பாடினுன்; முப்பது கோடி சங்க முழுமைக்கும் பொதுவுடமை என்று முரசு கொட்டினுன்.

மண்ணுக்குள் புதையுண்டு, வெளிக்கிளம்பப் போராடும் விதையின் முளையைப் பார்—பார்த்துக்கொண்டே யிரு—அதுவே ஆலமரமாய் வளர்ந்து, விழுதுவிட்டு, விதை விசிறி, உலகைக் கவ்விப் படர்வதைப் பார்க்கலாம்.

இப்படி வளரும், ஜீவிய அம்சத்தைப் பார்க்காவிட்டால் வாழ்வைப்புரிந்து கொள்ள முடியாது.

அரை உண்மையை, "கொட்டையடித்த" உண்மையை புதுமைப்பித்தன் சித்திரிப்பானேன்? காரணம் அவரது உலகநோக்கு. முளையாவது, வளர்கிறதாவது—எல்லாம் பொய், பிரமை என்கிருர் புதுமைப்பித்தன். பிறகு, முளைகளைத் தேடிக் கண்டு பிடிப்பது நடக்கிற காரியமா?

வளர்ச்சி, முன்னேற்றம், முயற்சி—இவையாவும் மயக்கம், மாயை இவற்றைப்பற்றி யாராவது பேசினுல், அது 'தத்துவம்'. அதுவும் பொய்.

"நாசகாரக் கும்பல்" நிலப் பிரபுத்வக் கொடுமையைப் பிரதிபலிக்கிறது. ஆனுல், அந்தக் கதை, ஒரு உட்குவிந்த கண்ணுடி (concave mirror). அது உள்ளதை உள்ளபடி காட்ட முடியவில்லை பிரதிபிம்பம் வக்கரித்துக்கொண்டு விழுகிறது.

(தொடரும்)

"சோவியத் இலக்கியம்" என்கிற சஞ்சிகையின் 1955 செப்டம்பர் மாத இதழில் **இகார் சேர்னுட்ஷின்** எழுதியுள்ள கட்டுரையின் மொழி பெயர்ப்பு இது. சரித்திர சம்பந்தமான சில விஷயங்களையும், சில இலக்கிய கர்த்தாக்களைப் பற்றிய விஷயங்களையும் நீக்கி, கட்டுரையை அப்படியே மொழிபெயர்த்துள்ளோம். அடுத்த இதழில் இது முடிவுபெறும். மொழிபெயர்த்தவர் **திரு. கார்த்திகைவேலு.**

கலையும் வாழ்வும்

இகார் சேர்னுஸ்டின்

ருஷ்யாவின் முற்போக்கான இலக்கிய விமர்சனமும், அழகுநுகர்ச்சித் தத்துவமும் (aesthetics) சமூகப் புரட்சி இயக்கத்தோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. சென்ற காலத்திலிருந்த மாபெரும் ருஷ்ய விமர்சகர்களெல்லோரும் பொதுஜன ஊழியர்களாகவே திகழ்ந்தனர். இலக்கியத்தின் மூலம் மக்கள் உள்ளத்தில் புரட்சிகனலைக் கொழுந்து விட்டெரியச் செய்தனர் இம்மாவீரர்கள். மக்களை, நடைமுறை புரட்சிச் செயல்களுக்கும் தங்கள் இலக்கியத்தின்மூலம் அறைகூவி அழைத்தனர்.

உணர்ச்சியைத் தட்டி யெழுப்பும் பெலின்ஸ்கியின் கட்டுரைகள் அழகான ஓர் உப்பரிகையிலுள்ள அமைதிசூழ்ந்த அறையிலிருந்து எழுதப்பட்டவையல்ல. அச்சகத்திலிருந்துகொண்டே பேனாவின் துணைகொண்டு கிளர்ச்சியை நடத்திய வீரனின் கட்டுரைகள் அவை. மிகச் சிறந்த சிந்தனையாளரும், எழுத்தாளருமான செர்ஷெவ்ஸ்கி ஓர் புரட்சிக்காரர். அவர் கட்டுரைகளில் விவசாயப் புரட்சியின் கருத்துக்கள் ஊடுருவிச்செல்வதை நாம் காணலாம்.

கலை, இலக்கிய விஷயங்கட்கும், அரசியல், சமூகப் பிரச்னைகளுக்கும் நெருங்கிய தொடர்பை உண்டாக்கினர், இந்தப் புரட்சிகரமான இலக்கிய விமர்சகர்கள். சமுதாயத்தின் கோணத்திலிருந்து இலக்கியத்தைப் பரிசீலித்துத் தீர்ப்புக் கூறும் பொருட்டு, அவர்கள் இலக்கிய விமர்சனத்தில் இறங்கினர். கதைகளில் வரும் கதா பாத்திரங்களைப்பற்றி இலக்கிய நிர்

ணயிப்பை அளிக்கும்பொழுதே, சமூகத்தின் அவசரப் பிரச்னைகளை வாசகர்கள்முன் வைத்தனர்; சமுதாய அமைப்பில் தீவிர மாற்றம் தேவை என்பதை அவர்கள் உணருமாறு செய்தனர். ஒரு குறிப்பிட்ட இலக்கிய சிருஷ்டியை விமர்சிக்கும் பொழுது அதன் இலக்கிய நடையையும், நயத்தையும்பற்றி ஆழ்ந்த, தீர்க்கமான பரிசீலனை செய்தனர்; அத்துடன், அந்த இலக்கிய சிருஷ்டி பிரதிபலிக்கும் சமூகப் பிரச்னைகளையும் வாசகர்கள்முன் வைத்தனர்.

பின்பு ருஷ்ய விடுதலை இயக்கம் புதிய கட்டத்தை அடைந்தது; தொழிலாளிவர்க்கம் அந்த இயக்கத்தின் தலைவனாகியது. இக்கட்டத்தில் இலக்கியவானில் தோன்றிய மார்க்ஸீய விமர்சகர்களும், அதற்கு முன்பிருந்த முற்போக்கான பரம்பரையைப் பின்பற்றினர். இலக்கிய, அழகு நுகர்ச்சித் தத்துவப் பிரச்னைகளுக்கும், உடனடி அரசியல் கடமைகளுக்குமிடையே உயிருள்ளதோர் தொடர்பை உண்டாக்கினர்.

இத்தகைய மார்க்ஸீய விமர்சகர்களுள் ஒருவர் வாட்ஸ்லாவ் வொராவ்ஸ்கி; லெனினுடன் நேரடியாகப் புரட்சி இயக்கத்தில் பணியாற்றிக்கொண்டே, இவர் இலக்கிய விமர்சனக் கட்டுரைகளும் எழுதிவந்தார். இவரை மிகச் சிறந்த இலக்கிய மேதைகளுள் ஒருவராக லெனின் கருதினர். இவரது இலக்கிய விமர்னக் கட்டுரைகளெல்லாம் 1905ம் ஆண்டுக்குப்பின் எழுதப்பட்டவைகளாகும்.

அக்காலத்தில், பிற்போக்கான முதலாளித்துவ இலக்கியமானது 1905ம் ஆண்டுப் புரட்சியின் நினைவுகளை மழுங்கடித்து, அழிக்க முயன்றது. புரட்சியையே "குழி தோண்டி"ப் புதைக்க முற்பட்டது. புரட்சி என்கிற கருத்தையும், புரட்சிக்காரனையும் இழிவுபடுத்த முனைந்தது. அப்புரட்சி, மிருகத்தனமான அர்த்தமற்ற கலகம் என வர்ணிக்கப்பட்டது. மனித இயல்பில் மிருக உணர்ச்சிகள் இருப்பதாகவும், அவற்றைத் தட்டி எழுப்புவதுதான் புரட்சி எனச் சித்திரிக்கப்பட்டது. வாழ்வைப் பாதித்த கணக்கற்ற பிரச்னைகளிலிருந்து மக்கள் கவனத்தை மாயாவாதத்தின்பால் இந்த இலக்கியக் குப்பை திருப்ப முயன்றது. ஆண் - பெண் உறவை ஆபாசமாகச் சித்திரிக்கும் கழிசடை இலக்கியம், புத்தகக் கடைகளை நிரப்பின.

இத்தகைய சாக்கடை இலக்கியத்தை, இலக்கிய வீழ்ச்சியின் சின்னங்களைப் போற்றிப் புகழ்ந்தனர், ஒரு சில இலக்கிய விமர்சகர்கள். அவை உலகக் கலாச்சாரத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்த உன்னதச் சிருஷ்டிகளென வர்ணித்தனர். அது மட்டுமா? முன்காலத்திய முற்போக்கான இலக்கியப் பரம்பரை பற்றியே புதியதோர் நிர்ணயிப்பையும் அளிக்கத் தொடங்கினர். பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த புரட்சிகரமான இலக்

கிய மேதைகளெல்லாம், பொருள்முதல்வாதத்தையே தங்களின் அழகுநுகர்ச்சித் தத்துவத்திற்கு அடிப்படையாகக் கொண்டிருந்தனர்; அதோடு அவர்களின் இலக்கிய விமர்சனம் தீவிரக் கருத்துக்களைக் கொண்டிருந்தது. இதன் காரணமாகத்தான் இத்தகைய முற்போக்கான இலக்கியக் கர்த்தாக்களை விஷமத்தனமாகத் தாக்கினர், அப்பிற்போக்குப் பிண்டங்கள். இலக்கியத்தில், கலையில், சமூகக் கண்ணோட்டம் என்பது அர்த்தமற்றது, அபத்தமானது எனக்கூறினர். இலக்கியத்தின் ஒரே நோக்கம் அழகை அனுபவிப்பதுதான் என்றனர். யதார்த்தவாதக் கண்ணோட்டத்திற்குப் புறம்பான, அதிதீவிர அகங்காரம் நிறைந்த விமர்சனம் இது. இலக்கிய வீழ்ச்சியின் அறிகுறிகளில் ஒன்று.

இத்தகைய மிகப் பிற்போக்கான இலக்கியம், விமர்சனம், அழகுநுகர்ச்சித் தத்துவம், ஆகியவற்றை எதிர்த்துப் போராட வேண்டியது அவசர அவசியமாயிற்று. சென்றகாலத்திய மகத்தான இலக்கியச் செல்வத்தின் சிறப்புமிக்க அம்சங்களை முன்நிறுத்தி, முற்போக்கான அம்சங்களுக்கு உயிரளிக்க வேண்டிய பொறுப்பு யதார்த்தவாதிகளின் கடமையாயிற்று. அத்துடன் அழகுநுகர்ச்சித் தத்துவம் பற்றிய சோஷலிஸக் கோட்பாடுகளை வரையறுத்து, தொழிலாளி வர்க்கக் கலைக்கான வழியைக் காட்ட வேண்டிவந்தது. இத்தகைய பணியை திறமையுடன் ஆற்றியவர்களில் ஒருவர் வொராவ்ஸ்கி.

வாழ்க்கையைப் பிரதிபலிப்பதுதான் இலக்கியம் என்றார் வொராவ்ஸ்கி. அன்று, அழகுநுகர்ச்சித் தத்துவத்தின் அடிப்படைப் பிரச்னையாக விளங்கியது, கலைக்கும் யதார்த்த நிலைக்கும் உள்ள உறவைப் பற்றிய பிரச்னைதான். இதைத் தீர்ப்பதற்கு பொருள்முதல் வாதத்தையே அவர் அடிப்படையாகக் கொண்டார். "தன் விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்பட்ட, சுயேச்சையாக இருக்கின்ற, யதார்த்த நிலையை வர்ணிப்பவன் யதார்த்தவாதக் கலைஞன்." அத்தகைய கலைஞனின் சிருஷ்டி "வாழ்க்கையை கலாரசனையுடன் பிரதிபலிக்கிறது". சமுதாயத்தில் ஏற்படும் மாறுதல்களை "மிகச் சரியாகச் சுட்டிக்காட்டும் தன்மை வாய்ந்தது" என்று கூறினார்.

யதார்த்தவாத எழுத்தாளர்களின் இலக்கிய சிருஷ்டிகளில் சித்திரிக்கப்படும் "தத்ரூபக் காட்சிகளை"ப் பெரிதும் மதித்தார் அவர். யதார்த்த நிலையில் காணப்படும் தோற்றங்களை ஒரு எழுத்தாளன் படம் பிடித்துக் காண்பிப்பதை சரியாக நிர்ணயிப்பதைத்தான் விமர்சனத்தின் மிகமுக்கியமான கடமையாகக் கருதினர்.

சமூக அடிப்படையைக்கொண்டே எந்த இலக்கியத்தைப்பற்றியும் தன் முடிவைத் தெரிவித்தார் வொராவ்ஸ்கி. எந்த ஒரு

இலக்கியத்தையும் மதிப்பிடும் காலத்தில், "அதிலுள்ள ஜீவிய அம்சத்தை" பிரதானமாகக் கவனிப்பார். அதில் சித்திரிக்கப் படும் காட்சிகளையும், யதார்த்த நிலையையும், கலைத் தன்மையையும், உண்மை நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்ப்பார்.

அதே நேரத்தில், அந்த எழுத்தாளனின் விசேஷ குணங்களையும், அவன் எழுத்தின் தனித் தன்மைகளையும் ஆழமாகவும், துருவித்துருவியும் பரிசீலிப்பார். அத்துடன்கூட அந்த எழுத்தாளன் காலத்திய சூடான பிரச்சினைகளையும் முன்கொண்டு வைப்பார். இவ்விதம் சகல அம்சங்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டு, விமர்சித்ததாலேயே, அவர் விமர்சனங்களெல்லாம் மிகச் சிறந்தவையாக உள்ளன.

இதனுல்தான், ருஷ்ய எழுத்தாளர்களைப்பற்றிய அவர் கட்டுரைகளெல்லாம், ருஷ்ய நாட்டு படித்த கூட்டத்தின் வரலாறு பற்றிய சமூக ஆராய்ச்சிகளாகத் திகழ்கின்றன. அவர்களின் தத்துவார்த்த பூர்வீகத்தை நமக்குத் தெளிவாக்குகின்றன. அந்த எழுத்தாளர்கள் உருவாக்கிய கதாபாத்திரங்களின் அர்த்தத்தையும், முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

கலையை, இலக்கியத்தை இவ்விதம் அணுகினுல், வாழ்க்கையைப் பற்றிய, யதார்த்த நிலை பற்றிய சித்திரங்களை, போட்டோக்கள் போல, படம் பிடித்துக் காண்பிப்பது என்ற ஆபத்தான கண்ணேட்டத்தில் கொண்டு விடாதா? இல்லை. வொராவ்ஸ்கி அப்படிப் பார்க்கவில்லை. கலை என்பது யதார்த்த வாழ்வைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அம்சத்தைச் (Typical) சித்திரிக்க வேண்டும்; வெறுமனே காப்பி அடிக்கக் கூடாது என்பதே அவர் கருத்து.

"ஒரு எழுத்தாளனின் கருத்தாழம், உண்மையைப் புரிந்து கொள்ளும் திறமை, அவன் எழுத்தோவியங்களிலுள்ள உயிர் ஆகியவற்றைக் கொண்டு தான் அவன் சிருஷ்டிகளை மதிப்பிட வேண்டும்" எனக் கூறியுள்ளார்.

யதார்த்த நிலையை கலைஞனின் கண் கொண்டு பார்த்து, புரிந்து, அதன் அர்த்தத்தை எடுத்துக் கூறுவதுதான் கலையைப் பொறுத்தவரை, உண்மையாகும். வாழ்க்கையில் 'நடக்கும்' சம்பவங்களை, தற்செயலான தோற்றத்தை, அப்படியே சித்திரிப்பதல்ல கலை. ஒரு நியதிக்குட்பட்டிருக்கும் இயற்கை வாழ்வைப் பிரதிநிதித்துவப் படுத்தும் (Typical) கதாபாத்திரங்களை வர்ணிப்பது தான் உண்மைக் கலை. அத்தகைய கதாபாத்திரங்கள் "தனித் தோற்றங்களின் சாராம்சம் அத்தனையையும் தன்னகத்தே ஒருங்கு சேர்த்துப் பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும்."

யதார்த்தத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அம்சங்களை ஆழமாகவும், பல கோணங்களிலிருந்தும் வர்ணிக்க வேண்டும். இத்தகைய சக்தி தான், கலைத்

திறமைக்கு மிக முக்கியமான அளவு கோல்.

" வாழ்க்கையின் பொதுவான இரகசிய அர்த்தத்தை" ஒவ்வொரு எழுத்தாளனும் வேறுபட்ட முறையிலே ஆழ்ந்து நோக்குகிருன். கலையில் உண்மை இப்படிப் பல்வேறு அளவில் பார்க்கப்படுவதற்கு எழுத்தாளர்களின் திறமைதான் காரணம். "தோற்றத்தின் உயிருள்ள உண்மையை உணர்ந்து, வர்ணிக்கும் சக்தி"தான், அத்திறமை என்ருர் வொராவ்ஸ்கி. ஆனல் வெறும் திறமை மட்டும் இருந்தால் போதுமா? எத்தனையோ திறமையான எழுத்தாளர்களின் சிருஷ்டிகளில் வாழ்க்கை திரித்துக் கூறப்பட்டுள்ளது; பொய்மை நிரம்பி வழிகிறது. காரணம் என்ன? அத்திறமையைச் செயலறச் செய்யும் சக்தி ஒன்றிருக்கிறது. அது அவனை வாழ்க்கையின் சரியான உண்மையைக் கூர்ந்து நோக்கி அதைச் சித்திரிக்கச் செய்ய இயலாமல் செய்துவிடுகிறது. எனவே, வெறும் திறமைமட்டும் பார்த்தால் காணுது. யதார்த்த நிலைமையை அவன் எப்படிப் பார்க்கிருன், அவன் உலகக் கண்ணேட்டம் என்ன என்பதையும் பார்க்கவேண்டும். அத்துடன் சமூகப் போராட்டங்களில் அவன் நிலை என்ன, அவன் சிருஷ்டிகளில் எந்த வர்க்க நலன்கள் பிரதிபலிக்கப் படுகின்றன என்பதையும் பார்க்கவேண்டும். ஏனெனில், கலை–இலக்கியப்பணி ஏதோ சொந்தச் சொத்தல்ல, தனி உடைமை கொண்டாட. மிகச் சிறந்த அர்த்தத்தில் சமூகத் தொண்டாகத் திகழ்வது அது.

எழுத்தாளரின் பூரண சுதந்திரம் பற்றி அந்நாளில் பெரிதும் பேசப்பட்டது. எழுத்தாளன் ஒரு 'கற்பனைக் கடல்', 'சிருஷ்டி கர்த்தா.' எனவே, அவனது இலக்கிய சிருஷ்டிக்கு தங்கு தடையற்ற சுதந்திரம் தேவை என்று கூறப்பட்டது.

இத்தகைய கூற்றை வொராவ்ஸ்கி நிராகரித்தார். "புனிதமானது என்று கூறப்படும் சுத்தமான அழகுநுகர்ச்சிக்குத் தத்துவம்கூட, ஓரளவு சமூக நிலைகளால் பாதிக்கப்படுகிறது. அந்தந்தக்காலம் அந்தந்தக் கவிஞனைக்குழந்தையாகப் பெற்றெடுக்கிறது. அவன் அதற்கு வாரிசு. எனவே, கவிஞன் தன் பரம்பரையின் கலை உணர்ச்சிகளையும், கலை அறிவையும் தனதாக்கிக் கொள்கிருன். ஒரு எழுத்தாளனின் கருத்துக்கள், தெளிவு, விருப்பு வெறுப்புக்கள், முடிவுகள், பொதுவாக அவனுடைய கண்ணேட்டம், ஆகிய எல்லாமே அவன் தோன்றிய சூழ்நிலையும், அவன் நுகர்ந்துகொண்ட தத்துவார்த்த வாழ்வும் உருவாக்கியவைதான்" என விளக்கிக் காட்டினுர்.

கலைச் சிருஷ்டிகளின் சமூகத் தன்மையையும், வர்க்க உள்ளடக்கத்தையும் கூர்ந்து கவனித்து எடுத்துக்காட்டினுர். சமூகப் போராட்டங்களில் அவை ஆற்றிய பங்கையும் விளக்கினுர்.

உதாரணமாக, நசிவு இலக்கிய கர்த்தாக்களைப் பற்றிய அவர் கட்டுரைகளை எடுத்துக் கொள்ளலாம். இவர்கள் தங்களின் "முற்போக்குத் தன்மை" பற்றியும், "புரட்சிகரமான கண்ணோட்டம்" பற்றியும் ஜம்பமடித்துக் கொண்டனர். தங்களின் சுதந்திரத்தன்மைக்காகவும், புதிய புதிய முறைகளைக் கண்டு பிடித்ததற்காகவும் தங்களைத் தாங்களே பாராட்டிக்கொண்டனர். எதிர்காலத்துக்காகப்போராடும் வீர சிகாமணிகள் எனத் தங்களை அழைத்துக்கொண்டனர். முதலாளித்துவ சமுகத்தின் அடித்தளத்தையே நொறுக்க வந்தவர்கள் தாங்கள், எனக் கூறிக்கொண்டனர்.

வொராவ்ஸ்கி இவற்றை ஏற்கவில்லை. இந்த வீழ்ச்சியுற்ற இலக்கியத்தை, "முதலாளித்துவ சமூகம், தன் சொந்த இன்பத்திற்காக உற்பத்தி செய்த அழுகிப் போன பழம்" என்று வர்ணித்தார். "பிற்போக்கான இலக்கியம், சமூகத்தின் பிற்போக்கான கருத்துக்களைத்தான் கூற முடியும்." "அனுபவமற்ற சிறுபிள்ளையின் அசட்டுத்தனத்தோடு, மூர்க்கத்தனமான காலாடிகளின் நடைமுறைத் தார்மீகக் கோட்பாடுகளை"யும் இவை வெளிப்படுத்துகின்றன என்று கூறினர்.

பிற்போக்கான முதலாளித்துவப் படிப்பாளிகளின் மனோநிலையை இந்த இலக்கியங்கள் பிரதிபலித்ததனால்தான், அவை வாழ்க்கையைப்பற்றிச் சரியான ஆழ்ந்த சித்திரத்தை அளிக்க இயலவில்லை.

இந்த முதலாளித்துவ அறிவாளிகள், வாழ்க்கையைக் கண்டு அஞ்சுகின்றனர். அந்தப் படிப்பாளிக் கூட்டத்தின் ஆசைகளையும், உணர்ச்சிகளையும், கனவுகளையும் சித்திரிக்கும் இந்த எழுத்தாளர்கள், யதார்த்த நிலையை உண்மையாக சித்திரிப்பதை விடுத்து, வாழ்க்கையைத் திரித்துக் கூறுகின்றனர்.

உயிருள்ள, உண்மையான வாழ்விலிருந்து விலகிச் செல்லும் தன்மை ஒரு எழுத்தாளனுக்குத் தற்செயலாக நிகழக்கூடியதல்ல. சமூகப் போராட்டங்களை விட்டு விலகிச் செல்லும் படித்த கூட்டத்தோடு நகமும் சதையும்போல அந்த எழுத்தாளன் ஒட்டிக்கொண்டு இருப்பதுதான் அடிப்படைக் காரணம்.

(அடுத்த இதழில் முடியும்)



பாரதியார் பிறந்த காலத்தில் தமிழ் மொழியும் ஜன சமூகமும் அவ்வளவாக நல்ல நிலைமையில் இல்லை. ஏங்கிக்கிடந்த தமிழர்கள், தூங்கிக் கிடந்த தமிழ்மொழி—இதுதான் பாரதியார் கண்டது. இந்த நிலையிலிருந்த தமிழர்களை மாற்றி, ஊக்கமும் உள் வலியும் ஏற்படும்படியாகச் செய்வது மிகவும் அசாத்தியமான வேலையாகும். ஆனால், இந்த வேலையை பாரதியார் வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.

தமிழன் தலைநிமிர்ந்து நடக்கும்படியாக, அவனை ஆண்மகனாக ஆக்கிய பெருமை, பெரும்பான்மையில் பாரதியாரைச் சேர்ந்ததாகும்,

—வ. ரா.

பாரதியார் வாழ்ந்த காலம்

வ. ரா.

பாரதியார் பிறந்த காலம், தமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரையில், வெகு விநோதமான காலம். நகர நெருக்கடி தோன்றாத காலம்; கிராமம் பாழாகாத காலம். பஞ்சமும் பருவ மழையும் ஆண்டவனின் லீலைச் சோதனைகள் என்று, ஆலோசனை செய்யாமல் மக்கள் அலறிக்கொண்டிருந்த காலம். காப்பி என்பதே தெரியாத காலம். காலணா நாணயத்தைக் கையில் வைத்துச் சுண்டிச்சுண்டி அழகுபார்த்த காலம். தானியங்களின் ஆகவிலை ஏறாத காலம். தேரும் திருவிழாவும் தெருக்கூத்துக்களும் ஜனங்களுக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்த காலம். ஜோஸியம் சொல்லும் வள்ளுவர்களால், உயர்ந்த படிப்பாளிகளுக்குக் கூடத் தாசில் உத்தியோகத்துக்கு மேலே சொல்லத் தெரியாத காலம். 'ஐகோர்ட்டு பாரிஸ்டர்' என்று வெகு மரியாதையுடன், தேவலோகப் பிறவியைப் பற்றிப் பேசுவதைப் போல, காதோடு காது வைத்து ரொம்ப ரகசியமாகச் சொல்லும் காலம். வைரங்கள், கைகளையும் காதுகளையும் மார்புகளையும் அலங்காரம் செய்யாத காலம். பருத்திப் புடவையைத் தவிர, பட்டுப் புடவையை அதிகமாக அறியாத காலம்.

கதாகாலக்ஷேபங்களின் மூலமாகக் 'கல்வியைக் கேட்ட' காலம். பரத நாட்டியத்தைப் பரத்தையர் மட்டும் ஆவலுடன் ஆதரித்துப் போற்றி வந்த காலம். 'போன உயிரைத் திருப்பிக் கொண்டுவரும் வித்தை

யைத் தவிர, வேறு எல்லா வித்தைகளிலும் கைதேர்ந்த வெள்ளைக்காரன்' என்று இங்கிலீஷ்காரனை வாயாரப்புகழ்ந்த காலம். 'விக்டோரியா மகாராணி காலத்தில் விபரீதம் எதுவாவது தோன்ற முடியுமா' என்று ராஜ பக்தி ஓங்கி நின்ற காலம். கிராமத்தில், சேர்ந்தாற்போல ஆயிரம் ரூபாயைப் பார்க்கமுடியாத காலம். நோட்டுகள் மலியாத காலம், வயிற்றுப் பிழைப்புக்கு வேறு என்ன வழி என்று வயிற்றுப் பிழைப்பைப் பெரிய பிரச்னையாகப் பேசி வந்த காலம். 'கோச்சு வண்டி, இரட்டைக் குதிரைச் சாரட்டு' பேர் வழிகளைச் சிறு குபேரர்களாக மதித்து மயங்கிய காலம்.

இந்தக் காலத்திலே தமிழர்களின் வாழ்க்கை எவ்வாறு இருந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்? தாயுமானவர், 'யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும், உறங்குவதுமாக முடியும்' என்று பாடியிருக்கிறாரே, அவ்வாறே தமிழர்களின் வாழ்க்கை நடைபெற்றது. கலையைப்பற்றித் தமிழர்களுக்குக் கவலையா? கல்வியைப் பற்றிக் கவலையா? பொன்னைப்பற்றிக் கவலையா? அரசியலைப் பற்றிக் கவலையா? கவிதையைப் பற்றி அவர்கள் யோசித்ததுண்டா? தமிழ் மொழி, தோல் சுருக்கம் காணுவதைப்போல, சுருக்கம் கண்டு வந்ததைப்பற்றி அவர்கள் சிந்தனை செய்தார்களா? கைத் தொழில்களைப் பற்றி அவர்கள் கவலைப் பட்டார்களா? 'ஆண்டவனுடைய பிரதிநிதியாக, ஆங்கிலேயன் இந்நாட்டின் அரசியல் பொறுப்பை ஏற்று, நீதித் தராசைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் வரையில், நமக்கென்ன கவலை?' என்று அவர்கள் பிதற்றிக் கொண்டிருந்தார்கள்.

கையில் நீதித் தராசைப் பிடித்துக்கொண்டிருக்கும் இங்கிலீஷ்காரன் தன்பையில் பணம் நிரம்புகிறதா என்பதைத்தான் தனது லட்சியமாகக் கொண்டிருந்தான் என்று அப்பொழுது யாரேனும் தமிழர்களிடம் சொல்லி, தண்டப் பிரயோகம் பெறுமல் தப்பித்துக்கொள்ள முடியுமா? "நம்முடைய மதத்தில் அவர்கள் தலையிடுகிறார்களா? நம்முடைய பெண்களை அவர்கள் கலியாணம் செய்துகொள்ள ஆசைப் படுகிறார்களா? நம்முடைய ஆசாரங்களை அவர்கள் கெடுக்கிறார்களா? ஏதோ கொஞ்சம் பணம் எடுத்துக் கொள்ளுகிறார்கள். அதனாலென்ன? தேன் எடுப்பவன் புறங்கையை நக்காமல் இருப்பானா?'' என்று இங்கிலீஷ்காரர்களுக்குப் பரிந்துபேசும் கூட்டந்தான் இந்த நாட்டில் பெரும்பான்மையாய் இருந்தது. வெள்ளைக்காரர்களைப் போல இருக்க வேண்டும் என்று பொதுவாக எல்லாரும் ஆசைப்பட்டார்கள். அதற்கு ஆரம்ப அஸ்திவாரமாக, இங்கிலீஷ் படிப்பதில் அளவற்ற மோகங் கொண்டார்கள்.

நாட்டிலோ தரித்திரம் தாண்டவமாடுகிறது. இந்தச் சமயத்

தில், சீமையிலிருந்து சுகபோக வாழ்வுக்கு ஏற்ற சாமான்களை, இங்கிலீஷ்காரர்கள், இந்த நாட்டில் கொண்டுவந்து ஏற்றினார்கள். இவைகளை அனுபவிக்கும் ஆசை, தமிழர்களின் உள்ளத்தில் உதிப்பது இயற்கைதானே? ஆனால், 'சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்' என்பதை மட்டும் அவர்கள் மறந்து விட்டார்கள். சாமான்களை வாங்குவதற்கு, செல்வ நிலை சரியாக இருக்கவேண்டாமா? ஆனால், இதைப்பற்றி அவர்கள் கவலைப்பட வில்லை. ஆண்டவன் படைத்த இந்த மண்ணுலகில், மனுஷன் கவலைப்பட்டுச் செய்கிற காரியம் எதுவுமே இல்லை என்று சமாதானம் சொல்லிக்கொண்டு, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டார்கள்.

இதன் பயன் என்ன? பொறுப்பு உணர்ச்சியும், யோசனைத் திறனும் தமிழர்களை விட்டுப் போய்விட்டன. எந்த வகையிலும்,எதற்காகவும் பொறுப்பை ஏற்க மனம் இல்லாத நிலைக்குத் தமிழர்கள் வந்துவிட்டார்கள். 'முள்ளைத் தைத்துக் கொண்டேன்' என்று சொல்லுவது தான் முறையும் உண்மையுமாகும். ஆனால், பொறுப்பை ஏற்க மனமில்லாத தமிழன், 'முள் தைத்துவிட்டது' என்று முள்ளின்பேரில் பழியைப் போட்டு, அந்த விஷயத்தில் தனக்குச் சிறிதளவு கூடப்பொறுப்பு இல்லாததுபோலப் பேசும் ஆச்சரியத்தைப் பாருங்கள்.

பொறுப்பற்ற, சுதந்தர மில்லாத வாழ்வுக்கு, சோம்பலை ஆட்சி புரியும் வாழ்வுக்கு, சுக வாழ்வு என்று பெயர் கொடுத்து அழைத்து, தமிழன் அகமகிழ்ந்தான். சோம்பலுள்ளவன் செயல் செய்வானா? கைச் சுண்டு விரலைக்கூட அவன் அசைக்க மாட்டான். உழைப்பின் மூலமாக எதையும் பெறமுடியும் என்பதில் அவனுக்கு நம்பிக்கை இருந்தால்தானே? ஆனால், அவன் உழைப்புக்கு ஒரு மாற்றுக் கண்டுபிடித்து, அகமகிழ்ந்தான். அதன் பெயர்தான் அதிருஷ்டம்.

இந்த அதிருஷ்டம் என்ற பொய்க்கு வேறு பெயர்களும் உண்டு. 'காலம்' என்று ஒரு பெயர். 'திருவருள்' என்று இன்னொரு பெயர். 'லக்ஷ்மி கடாக்ஷம்' என்று மற்றொரு பெயர். 'ஈசன் கருணை' என்று பிறிதொரு நாமதேயம். இவ்வாறு, அசடு என்ற படுகுழியில் அவன் வீழ்ந்தான். பிறனுடைய செயலால் தான், தான் நன்மை அடைந்து, முன்னேறிச் சுகவாழ்வு வாழ முடியும் என்று திடமாக நம்பின தமிழனை, விதிப் பிசாசு வேறு கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. இப்பேர்ப்பட்ட நிலைமையில் இருந்த தமிழர்களை யாரும் அடக்கி ஆளவேண்டிய அவசியமே இல்லை. அடக்குவதற்கு, என்ன எதிர்ப்பு இருக்கிறது? யார் உருட்டினாலும் பந்து உருண்டுகொண்டே போகும். இதைப் போலவே, தமிழர்களின் வாழ்வும். கண்ட அன்னியர்கள்

எல்லாம் தமிழர்களின் வாழ்வைப் பந்தாடிவிட்டார்கள்.

'தங்களுடையது என்று உள்ளப் பூரிப்போடும் கர்வத்தோடும் தமிழர்கள் சொல்லிக்கொள்ளும் படியாக, எதுவும் அவர்களுக்குக் கிடையாது' என்று தமிழ் நாட்டில் செய்யப்பட்ட பொய்யான பிரசாரத்துக்குத் தமிழர்கள் பலியானுர்கள். இந்தப் பிரசாரம் கூட, இங்கிலீஷிலும் பிறமொழிகளின் மூலமாயுந்தான் செய்யப்பட்டது. தமிழ் பாஷையைத் தமிழர்களே அலட்சியம் செய்தார்கள். 'தமிழ் கற்ருல், அது வயிற்றுக்குச் சோறு போடுமா? இடுப்புக்குக் கட்டத் துணி கொடுக்குமா?' என்று அசடு வழியும் ஆபாசக் குப்பைகளைக் கிளப்பினுர்கள். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதை அடியோடு மறந்து போனுர்கள். முக்திக்குப் பதிலாக, சர்க்கார் உத்தியோகமே மோட்சம் என்று வாதாடத் துணிந்தார்கள்.

தன்னம்பிக்கையும் சுதந்தரதாகமும் சுயமரியாதையும் தமிழர்களின் இதயக்கண் முன்னே, காட்சி அளிக்க மறுத்துவிட்டன. பராதீனம் என்பது பழுத்த கனியாகிவிட்டது. கைவிரிப்பும் பெருமூச்சுந்தான் கண்ட பலன்கள்.

பாலைவனத்தில் காணும் நீர்ச்சுனைகளைப்போல, ஒரு சிலரின் உள்ளத்தில், தமிழன் என்ற பெருமை உணர்ச்சி, ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது என்பது உண்மைதான். ஆனுல், அவர்கள் செயலற்ற சாதுக்களாக வாழ்ந்தார்கள்.

கூடவுளை, விவேகானந்தர் தமது இளம் பிராயத்தில் நம்பவில்லை. இந்த மனப்பான்மையோடு, அவர் ராமகிருஷ்ண பரமஹம்ஸரை நாடினுர். கடவுள் இருக்கிருரா என்று பரமஹம்ஸரைக் கேட்டார். இருக்கிருர் என்ருர் அவர். "தங்களால், எனக்குக் கடவுளைக் காண்பிக்க முடியுமா?" என்று கேட்டார் விவேகானந்தர். "ஆனந்தமாய்க் காண்பிப்பேன்" என்று பரமஹம்ஸர் சொன்னதைக் கேட்டு, விவேகானந்தரின் பார்வை அடியோடு மாறிவிட்டது. பரமஹம்ஸர் வெறும் சன்னியாசிச் சாதுவாக இருந்திருந்தால், அவர் சுவாமி விவேகானந்தரின் மனதைச் சிறிதளவு கூட மாற்றி யிருக்கமுடியாது.

தமிழன் என்று பெருமைப் பட்டுக் கொண்டிருந்த சிலர், வெறும் சாதுக்களாக வாழ்ந்ததால், அவர்களால் தமிழர்களின் இதயத்தைத் தொட்டு, பெருவாழ்வு என்ற இன்ப விளக்கை ஏற்றிவைக்க முடியவில்லை. 'ஏதோ, பொழுது போகவில்லை போலிருக்கு. தமிழனது பெருமையைப் பற்றிக் கதை கதைக்கிருர்கள்' என்று ஏளனக் குரலில், அந்தச் சாதுக்களைக் கேலி செய்தார்கள் மற்றவர்கள்.

தமிழர்களின் இத்தகைய பரிதாபகரமான மனநிலைமையை மாற்ற வெறும் சாதுக்களால் முடியுமா? முப்பாழும் பாழாகி, அதற்கப்பால் படர்ந்து ஒளி திக

ழும் பரமனின் பாதமே கதி என்று சொல்லும் வேதாந்தியும், உலகமே நிலையில்லாததென்று சொல்லித் தனக்கு மட்டும் அறுசுவை உண்டி வேண்டும் ஆண்டிப் பண்டாரமும், தமிழர்களைத் தட்டி எழுப்பமுடியாது. தமிழனைத் தட்டி எழுப்பி, அவனை முன்னேறச் செய்பவர் திடசங்கற்பமுள்ளவராக இருக்கவேண்டும்; தீர்க்கதரிசியாக இருக்க வேண்டும். இந்த உலகத்திலேயே நித்தியானந்தத்தை நாடு என்று சொல்லி, அதற்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்காத கலைஞனாக இருக்கவேண்டும், அவர், கவிதை வெள்ளத்தில் மிதந்து விளையாட வேண்டும். குழந்தைக்குத் தோழனாகவும், பெண்மைக்குப் பக்தனாகவும், அரக்கனுக்கு அமுக்குப் பேயாகவும், சுதந்தரத்துக்கு ஊற்றுக் கண்ணாகவும், 'சுற்றி நில்லாதே போ, பகையே' என்னும் அமுதவாய் படைத்த ஆண் மகனாகவும், கவிதைக்குத் தங்குமிடமாகவும், உள்ளத்தில் கனலும் கருணையும் ஒருங்கே எழப் பெற்றவனாகவும் எவன் ஒருவன் இருக்கிருனே, அவன்தான் தூங்கும் தமிழ்நாட்டைத் தட்டி எழுப்பி தலை நிமிர்ந்து நடக்கச் செய்யும் வல்லமை படைத்தவன்.

இப்பேர்ப்பட்ட மூர்த்திகரம் வாய்ந்த பாரதியார், தமிழ்நாட்டில் தோன்றியிராவிட்டால் என்ன ஆகியிருக்கும் என்று சிந்தனை செய்வதே சிரமமான வேலையாகும். அழுகிப்போன வாழைச் சிங்கம் வளர்வதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? 'அழுகின சிங்கமா இவ்வளவு வாளிப்போடு வளர்ந்திருக்கிறது!' என்று வியப்படையும்படியாக அது வளர்ந்திருக்கும். அந்த இயற்கை எழில் காட்சியைப்போல், பாரதியார் தமிழ்நாட்டில் தோன்றினுர். தமிழர்களின் வாழ்க்கை அழுகிப்போனது, அது அடியோடு மறைவதற்காக அல்லவென்பதையும், அது மறுமலர்ச்சியின் ஆணித்தரமான விதையின் வீர்யம் என்பதையும், நாம் பாரதியாரின் தோற்றத்திலிருந்து கண்டு கொண்டோம்.

> பொழுது புலர்ந்தது
> யாம் செய்த தவத்தால்
> புன்மை இருள் கணம்
> போயின யாவும்

என்ற இன்னிசைக் கானத்தைக் கேட்டுத் தமிழ்நாடு விழித்துக் கொண்டது. —சக்தி அக். '45



நீலமலை

—கே. சி. எஸ். அருணாசலம்—

(காவடிச் சிந்துச் சந்தம்)

சந்திரனை வழிமறிக்கத் தலைநிமிர்த்த மலைகளின்மேல்
வந்தமர்ந்து மேகம்தூது பேசும்—சுற்றிச்
சந்தன மரங்கள்வாசம் வீசும்!

" அந்தமாதி ஒன்றில்லாத ஆதவனும் இங்கு தாழ்ந்து
வந்தனை புரிந்து சென்றான் அன்றோ?—இந்தச்
சந்திரன் அகந்தைகொள்ளல் நன்றோ!"

என்று எங்கள் மலையில் வாழும் மென்கிளிகள் முன்புவந்து
நின்று தம்முள் எள்ளிநகை யாடும்—குயில்
நீட்டி நீட்டிக் கேலியாகப் பாடும்!

தொன்று தொட்டு வேந்தர்தம்மைச் சூழ்ந்துநிற்கும் சேனைபோல
நின்றுயர் மரங்கள்காவல் காக்கும்—கொம்பு
நீண்டயானை சுற்றிவேவு பார்க்கும்

சந்தடைந்த குகையிருட்டில் வந்துலாவும் வேங்கையின்கண்
பந்தம்ரெண்டு எரிவதுபோல் ஆடும்—மான்கள்
பயந்துமலைப் பாம்பைத்தாண்டி ஓடும்!

சிந்துகின்ற கொம்புத்தேனை அள்ளியுண்டு போதைகொண்டு
மந்திகள் மயங்கியேதள் ளாடும்—ஆடும்
மயில்களின்முன் அமர்ந்துதாளம் போடும்!

ஏலச்சக்கை மணமணக்கப் பாலருவி பொங்கிநூறு
கால்கள் கூடி நீள்நதியாய்ப் போகும்!—அதற்குக்
கருங்குவளை மலர்களேகண் ஆகும்!

காலகாலம் யுகயுகங்கள் கடந்துநின்றும் இளமைகொண்ட
நீலமலைச் சாரலுமிங் குண்டு—அந்த
நினைவினுக் கீடாகுமோகற் கண்டு?

வாயில்லாத பூச்சிகளாய் வாழ்வுதேடி ஓடிவந்து
நாயினும் கடையாக வெம்பி—காலம்
நல்லதாகும் என்றுநெஞ்சில் நம்பி.

தேயிலை தழைமலையில் தினமுழைத்துப் பொன்விளைத்துக்
காயும்வயி றோடுவாழ்ந்த கூட்டம்—இன்று
கரமுயர்த்திச் செய்யுதேஆர் பாட்டம்!

காதலும் சாதலும்

◆◆

முகவை இராஜமாணிக்கம்

◆◆

காதல் ஒரு கனிமரம் என்றால் சாதல் என்பது தளிர்க் காத பட்ட மரம். காதல்-வாழ்வுக்கு ஊட்டமளிக்கும். காதல்—வாழ்வில் ஓட்டத்தைத் தடுக்கும் வாழ்க்கைக்கு உரமளிப்பது காதல். பண்பை வளர்ப்பது காதல். கலை உணர்வை ஊட்டுவது காதல். சாதல் நினைவைத் தவிர்ப்பது காதல். அதனால் தான்,

ஆதலினாற் காதல் செய்வீர்
உலகத்தீரே
அதுவன்றோ இவ்வுலகத்
தலைமை இன்பம்!
காதலினால் சாகாமல்
இருத்தல் கூடும்
கவலைபோம், அதனாலே
மரணம் பொய்யாம்

என்கிறான், காதல் நெறியுணர்த்தும் கவிஞன் பாரதி.

ஆதலால், சாதலுக்கு இடமில்லை, காதல் கனிந்த வாழ்வில். காதல் வாழ்வில்தான்—கலை மணக்கும். அழகு சொட்டும், இன்பம் மிதக்கும். எழில் தவழும். பண்பு பாயும். கருத்து உறுப்பெறும். தத்துவம் மெருகேறும். உயிர் செழிக்கும். உணர்வு சிறக்கும். கருதியது கைகூடும், புகழ் நிலைக்கும். அமைதி நிலவும். சேவை இடம் பெறும். வையம் தழைக்கும். வாழ்வு வெற்றி பெறும். சாதல் தோல்வியுறும்.

காதலினால் மானிடர்க்குக்
கலவியுண்டாம்
கலவியிலே மானிடர்க்குக்
கவலை தீரும்
காதலினால் மானிடர்க்குக்
கவிதையுண்டாம்
கானமுண்டாம், சிற்பமுண்டாம்,
கலைகளுண்டாம்.

என்கிறான் காதற் புகழ் பாடும் புலவர் பெருமான் பாரதி.

சாதலை வெல்லும் சக்தியுடையது காதல். சாதலையும் புறங்கண்டு வாழவைக்கும் மந்திர சக்தி படைத்தது காதல். பதினாறு வயதில் விதி பறித்துக் கொண்ட தனது காலன் சத்தியவானை, தனது தூய காதலால் விதியை வென்று, சாவுக்கடவுளான எமனோடு போராடி, அந்த எமனுக்கே தண்ணீர் காட்டி தனது காதலன் உயிரை மீட்டாள் சாவித்திரி என்ற காதலேடு - இதற்கு அத்தாட்சி.

சூதிலே நாட்டைத் தோற்றுன், அப்பாவி அரசன் நளன். ஆதலால் நிடத நாட்டை விட்டுத் தனது காதலி தமயந்தியோடு வெளியேறுகிருன். ஒரு அடர்ந்த காடு. கரிய இரவு. பாழ் மண்டபம் ஒன்றிலே தங்குகிருர்கள் காதலர்கள். காதலன் பக்கத்திலிருப்பதால், தனது குழந்தைகளேயும், உலகத்தையுமே மறந்து அயர்ந்து உறங்கி விடுகிருள் தமயந்தி. ஆனுல், நளன் கண்கள் உறங்கவில்லே.

அன்னத்தின் உதவியால் தன் வாழ்க்கைக்கு ஏற்ற ஆரணங்கான தமயந்தியைக் காதலியாக அடைந்த நளனுக்குப் பழைய நினைவுகள் வந்து அலேமோதுகின்றன.

ஒத்த அழகும், ஒத்த உருவும் ஒத்த நலனும், ஒத்த பருவமும், ஒத்த பண்பும் வாய்ந்தவள் தமயந்தி என அன்னம் கூறக் கேட்ட நளன், அந்த அன்னத்தை அவள்பால் தூதனுப்பி, அவள் காதல் ஒப்பத்திற்காகக் காத்திருக்கிருன்.

அன்னம் போய் அரை நாழிகைகூட ஆயிராது அதற்குள்ளாக நளனுக்கு இருக்கை கொள்ளவில்லே. காதல் என்னும் இன்னேய் பற்றிக்கொண்டு விட்டது.

நாளொன்று போவதற்கு
நான்பட்ட பாடனைத்தும்
தாளம்படுமோ? தறிபடுமோ?
யார் படுவார்?

என்று குயிலின்மேற் கொண்ட காதலால் பாரதி பரிதவிப்பது போல, நளனது காதல் இதயம் துடிக்கின்றது.

"இவ்வளவு நேரத்தில் தமயந்தியிடம் போயிருக்குமா அன்னம்? இவ்வளவு நேரத்தில் அவளேப் பார்த்திருக்குமா? இவ்வளவு நேரத்தில் என் காதலே அவளிடம் எடுத்துரைத்திருக்குமா? இவ்வளவு நேரத்தில் அவளது ஒப்புதல் கேட்டு மீளப் பறந்து வந்து கொண்டிருக்குமா?" என்று வாய்விட்டுக் கூற முடியாமல் விம்மினுனும், யார்? மும்மதங்களேயும் பொழிகின்ற யானேப்படைகளே எதிர்த்து வென்ற நிடதநாட்டுக் காவலன் நளன்!—இது வெண்பாப்புலிப் புலவன் புகழேந்தியின் காதற் சித்திரம்.

"செம்மை நிறைந்தவன், உயிர்களிடத்தில் கருணே உடையவன், செங்கோல் கைக்கொண்டவன், ஆண் தன்மை கொண்டவன், குன்றனேய தோளுடையவன், நாலு நிலத்திலும் மிக்கவன், உனக்கு உரியவன், உன்னே நினைந்து உருகி நிற்பவன்" என்று அன்னம் சொல்லக் கேட்டு, நளன்மீது காதல் பூண்டு அவனேக் கைப்பிடித்தவளல்லவா காதலி தமயந்தி!

அந்தக் காதலி, இப்பொழுது காட்டிலே, இர்விலே, பாழ் மண்டபத்திலே, பயங்கரச் சூழ்நிலேக்கு நடுவே, உடுத்திய ஒற்றை ஆடையோடு வெறுந் தரையில் காதல் நினேவன்றி வேறு எந்த நினேவும், இன்றி உறங்குகின்ற உத்தமக் காதலியின் நிலேகண்டு, நள

னுக்குத் துக்கம் மேலிடுகிறது. தன் காதலியாவது, பிறந்தவீடு சென்று பிள்ளைகள் நினைப்பிலே வாழட்டும் என்றுதான், நளன் அவளைப் பிரிந்து போகிறான்.

காதலியைச் சாகடிக்கவேண்டும் என்ற கருத்திலல்ல, அவள் வாழ்ந்திருக்கவேண்டும் என்பதற்கு வகை செய்வதாகக் கருதித்தான், எதிர்காலத்தில் இருவரும் ஒன்றுகூட நேரிடலாம் என்பதை நினைவிற்கொண்டுதான் நளன் அன்றிரவு பிரிந்திருக்கவேண்டும். ஆதலால்தான், இருவரும் சாவதற்கு ஒப்பந்தம் செய்துகொள்ளவில்லை.

காதலியைப் பிரிகிறோமே என்ற துயரம்நிறைந்த உள்ளத்தோடு ஓடுகிற நளனைக் கண்டு ஒரு பொன் நண்டு, தன் வலைக்குள் போய் ஒளிந்து கொண்டு, அந்த வளையை மண்ணைக் கொண்டு மூடியதாம்.

" நான் கைப்பிடித்த காதலியைக் கானகத்தில் காரிருளில் கைவிட்டு ஓடுகிற பாதகனுயிற்றே என்று நீ ஓடி ஒளிகிறாய் நண்டே?" என்று காதல் துயர் மூண்ட நளன் கேட்பதாகப் பாடியுள்ளான் காதல்துயரறிந்த கன்னித் தமிழ்ப் புலவன் புகழேந்தி.

காதல் வாழ்வு அற்றுவிட்டால் அது பாலைவனம்தான். வரண்ட பிரதேசம்தான். அருகம் புல் கூட முளைக்காத பொட்டல் வெளிதான். காதல் வாழ்வு என்பது, சோலைவனம். வற்றாத நீர் சுரக்கும் தேனாற்று. புகழ் உலகம். பொன்னாடு. கலைமலிந்த நாடு.

வாழ்வுக்கு உணவு காதல். அந்தக் காதற்பயிரை அழிக்க முற்படும் சக்திகளைச் சீறுகிறான் செந்தமிழ்ப் புலவன் பாரதி'

"...பாரினிலே காதலெனும்
பயிரை மாய்க்க
மூடரெல்லாம் பொறாமையினால்
விதிகள் செய்து
முறைதவறி இடர்விளைத்து
நிற்கின்றாரே..."

என்று அவர்களைக் கடிந்து கொள்கிறான் பாரதி.

காதற் கொலைகள், காதற் பலிகள் நிகழ்ந்தால், அவை வாழ்விற்கு வளமளிக்காது; ஆக்கமளிக்காது. வாழ்வின் சுவையைக் குன்ற வைத்துவிடும். கலையழகைச் சிதைத்துவிடும்.

தனது காதலியின் நினைவுச் சின்னமாக தாஜ்மஹாலை எழுப்பினானே, ஷாஜஹான், அவன் நோக்கமென்ன? தன்னைப் போல், காதலியைப் பிரிந்து துன்பம் அனுபவிக்கக்கூடாது காதலர்கள், அவர்கள் கண்ணீர் சிந்தக்கூடாது என்று நினைவுறுத்தத்தான், தாஜ்மஹாலை எழுப்பியுள்ளான்.

காதலனைப் பிரிந்து சிலகாலம் இருக்கக்கூட ஒப்புக்கொள்ளவில்லை காதலி. " வேலைநிமித்தமாகச் செல்கிறேன். விடை கொடு. விரைவில் மீண்டும் வருகிறேன்" என்கிறான் காதலன். "போகவில்லை என்ற பேச்சென்றால் என்னிடம்சொல் போய்விட்டுத் திரும்பி வருகி

றேன் என்ருல், அதை, நீ திரும்பி வரும்பொழுது, உயிரோடு பிழைத்திருப்பவர்களிடம் சொல்லிவிட்டுப் போ" என்கிருள் காதலி. அதாவது, நீ பிரிந்தால் நான் உயிர்வாழமுடியாது போகாதே என்னைவிட்டுப் பிரிந்து. இல்லையெனில் என்னையும் உடனழைத்துப் போ" என்கிருள் திருக்குறள் காதல் பெண்,

"செல்லாமையுண்டேல்
எனக்கு உரை, மற்றும் நின்
வல் வரவு வாழ்வார்க்கு உரை"

என்று காதலர்கள் படும் பிரிதல் வேதனையைப் படம் பிடித்துக் காட்டுகிருன், பைந்தமிழ்ப் புலவர் பெருமான், வள்ளுவன்.

(அடுத்த இதழில் முடியும்)

வெளிவந்துவிட்டது! பிரதிகளுக்கு முந்துங்கள்!

1956-ம் வருட

ஜனசக்தி பிரசுராலய காலண்டர்

(பிரதி ஒன்று அணு 10)

நல்ல ஆர்ட் காகிதத்தில் மூவர்ண படம், தமிழக விவசாய மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கிறது. முக்கிய விபரங்களுடன் கூடிய மாதாந்திர தேதித் தாள்கள்.

—5 பிரதிகளுக்குமேல் வாங்கும் ஏஜெண்டுகளுக்கு கமிஷன் 20 சதவிகிதம்.

—தனிப் பிரதி வாங்குவோர் பிரதிக்கு 10 அணு வீதம் அனுப்பவேண்டும்.

—தபால் செலவு இனம்.

—முன்பணமின்றியோ, வி.பி.பி.யிலோ அனுப்பப்படமாட்டாது.

எல்லா ஏஜெண்டுகளும் உடனே பணத்துடன் ஆர்டர் அனுப்புங்கள்.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
199, மவுண்ட்ரோடு, சென்னை-2.

சிறுகதை

பிரிந்த பாதை

பண்டரிநாதன்

டிக், டிக், டிக்......

கைக் கடிகாரத்தின் மெல்லிய ஓசையுடன் என் இதயத் துடிப்பும் போட்டியிட்டது.

குளிர் காலத்து இரவு. பகல் நேரத்திற் குரிய அசைவுகள் அனைத்தும் அடங்கி, ஒடுங்கியிருந்த நேரம். அமைதி, நிசப்தம், மௌனம்-எல்லாம் ஒன்று கலந்து ஓர் உரு பெற்றதைப் போல் தோற்றமளிக்கும் வேளை!

டிக், டிக், டிக். கடிகாரத்தின் மெல்லிய, ஒரே மாதிரியான, எப்பொழுதும் கேட்டுக்கொண்டிருக்கும் அதே ஓசை. மணியைப் பார்த்தேன்; பன்னிரண்டு, நாற்பது.

மார்புக் கூட்டிலிருந்து ஓசையுள்ள பெருமூச்சு வெடித்துக் கொண்டு வெளிப்பட்டது. பெருமூச்சு! நீண்ட, சூடான, துயர் தெரிவிக்கும் பெருமூச்சு!

'பாக்கட்'டிலிருந்த கடைசி சிகரட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டேன். புகையை அதிகமாக இழுத்து, மெதுவாக, சீராக வெளியே விட்டேன். மின்சார விளக்கின் பிரகாசமான ஒளியில் புகையின் நீலநிறம் பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

சுருண்டு சுருண்டு மேல் நோக்கிச் செல்லும் மென்மையான புகையுடன், என் சிந்தனையும் தயங்கித் தயங்கி முன்னேறத் தொடங்கியது.

மாலையில், கமலி கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்வது? "சம்மதமா, இல்லையா? இரண்டில் ஒன்றை தைரியமாகச் சொல்லி விடு. இனியும், இழுத்துக் கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை" — அவளுடைய குரலில் கண்டிப்பும் இருந்தது; காரமும் இருந்தது.

அப்படிக்கேட்க, அதட்டிப்பேச, அதிகாரத்துடன் கோர அவளுக்கு உரிமை இல்லையா? இருக்கிறதே! அண்ணனின் வாழ்க்கை சந்தோஷமாக அமையவேண்டுமென்பதில் தங்கைக்கு—அதிலும் கல்யாணமானவளுக்கு—கவலை இருப்பது நியாயந்தானே!

சுமதியைக் கண்டு பேச, அவளுடைய பெற்றோரின் சம்மதத்தைப்பெற, கமலி வலையில் சிக்கிய மீனாகத் துடித்துக்கொண்டிருக்கிறாள். அதை நான் அறிவேன், சுமதியும் நன்றாக அறிவாள்.

ஆனால்?

என் திருமணத்திற்கு பெருந்

தடையாக இருக்கும் காரணத்தை, சுமதியும் நானும் வாழ்வில் இணைய முடியாதபடி குறுக்கேயிருக்கும் பெரும் பள்ளத்தின் அவசியத்தை கமலிக்கு எப்படி விளக்கிச் சொல்லுவது?

அதைக் கேட்டபிறகு, கமலி எங்களைப் பற்றி என்ன நினைப்பாள்? எங்களுடைய பழக்கம், சிநேகம் நட்பு, அன்பு, காதல்—இதற்கெல்லாம் அவள் எந்தவிதமான உருவம் கொடுப்பாள்?

நான் ஏமாந்தவன், சுமதி வஞ்சகி—இப்படி கமலி எண்ணுவாளா? இல்லையென்றால், அடையமுடியாத சுகத்தை அனுபவிக்க எண்ணி, ஆசைப்பட்டு, முடிவில் எல்லாம் இழந்தவள் என்று நினைத்து சுமதியிடம் அனுதாபம் காட்டுவாளா?

என்ன செய்வாள் என் தங்கை? எப்படிப் போகும் அவள் எண்ணம்?

இந்த கவலைக்கெல்லாம் அடிப்படையாக அமைந்த அந்த சம்பவம்—ஏறக்குறைய ஆறு மணி நேரத்திற்கு முன் நடந்த அந்த நிகழ்ச்சி-என் கண்முன் பசுமை மாறுது வந்து நின்றது.

குளிர்காலமா யிருந்த போதிலும், வழக்கம்போல் சுமதியும் நானும் கடற்கரைக்குச் சென்றோம். கூட்டம் இல்லை. தண்ணீருக்குப் பக்கத்தில் போய் அமர்ந்தோம்.

மாலை நேரம். சுடாத மஞ்சள் வெயில். எதிரில் அலை முழக்கம் நிற்காத, நீண்டு விரிந்த, வெளுத்த பச்சை நிறக் கடல்.

சுமதியின் மெல்லிய விரல்கள் மிருதுவான வெண் மணலில் ஆழமற்ற கோடுகள் கிழித்தன. நானும் கைப்பிடி நிறைய மண்ணை எடுத்துக் கொண்டு விரலிடுக்கின் வழியாக கீழே விடத் தொடங்கினேன்.

அவள் என்னைப் பார்த்தாள், நானும் அவளைப் பார்த்தேன். அவள் புன்னகை செய்தாள், நானும் மெல்ல, உதடு திறக்காது சிரித்தேன். அவள் பேசவில்லை, நானும் மௌனமாக இருந்தேன்.

முழக்கமிடும் கடல் வெண் நுரை நிரம்பிய அலைகளை வீசியது. தண்ணீர் எங்களை நோக்கி ஓடி வந்தது, பிறகு திரும்பிச் சென்றது. சிறிய, பெரிய நண்டுகள் அங்கும் இங்கும் ஓடின. தலைக்குமேல் ஒன்றிரண்டு காக்கைகள் பறந்து போயின.

"சுமதி?"— நான் அழைத்தேன்.

கடல் மீதிருந்த கண்களைத் திருப்பி, அவள் என்னைப் பார்த்தாள், பேசவில்லை.

"சுமதி?"

"உம்......"

"என்ன சுமதி, மௌன விரதமா?"

அவளுடைய கரிய விழிகள் என்னைச் சந்தித்தன. அந்த மோகமூட்டும் பார்வை என் நெஞ்சை மயக்கியது. மறுவினடி, மணலுடன் விளையாடிக் கொண்டிருக்கும் அவளுடைய விரல்களைத் தொட்டேன், என் அருகில் இழுத்தேன்.

"உஸ்......" அவள் இதழ்கள்

இரண்டும் அழகாகக் குவிந்தன.

சிறிது நேரம் வரை அந்த பிடியை நான் விடவில்லை; அவளும் விலக்கவில்லை.

சுமதி, தலை சாய்த்து, கடைக் கண்ணால் என்னைப் பார்த்தாள். "ஒரு விஷயம்". அவள் பேசினாள்.

"என்ன சுமதி?"

"அது..." பேச்சை முடிக்காமல், அவள் நேராகப் பார்த்தாள் உள்ளத்திலிருந்த தயக்கத்தை, நெஞ்சின் சலனத்தை, ஏதோ ஒரு விதமான கவலையை, அவள் பார்வையால் வெளியாக்கினாள்.

"அது...அது என்ன சுமதி?"

சுமதி பெருமூச்சு விட்டாள். "நாமிருவரும் இப்படி நெருங்கிப் பழகுவது......"

"என் தங்கை கமலிக்குத் தெரிந்து விட்டது; அதைத் நானே நீ சொல்லப்போகிறாய்?" பேசி விட்டு நான் பலமாகச் சிரித்தேன்,

அவள் பேசவில்லை.

"சுமதி, இதில் என்ன தவறு இருக்கப் போகிறது, நீ பயப்படுவதற்கு? நான் உன்னை நேசிக்கிறேன், நீயும் அதே அன்பைக் காட்டுகிறாய், இல்லையா?"

அவள் தலை அசைத்தாள்.

"சுமதி, காதலர்களாக இருப்பதால் பயந்து பயந்து சந்திக்க வேண்டி இருக்கிறது. முன்பின் பார்த்து பேசவேண்டி இருக்கிறது. அதனால், கல்யாணம் செய்துகொண்டபிறகுதான், நிம்மதியாக, நிர்ப்பயமின்றி மூச்சு விட முடியும் என்று நினைக்கிறாய் சரிதானே, நான் சொன்னது?"

இமை கொட்டாது அவள் என்னைப் பார்த்தாள்.

"சுமதி, நான் தயார். பாரேன், இன்னும் ஒரு வாரத்திற்குள், என்தங்கை, அண்ணனுக்காகப் பெண் பார்ப்பதற்கு, உன் வீட்டுக்கு வரப்போகிறாள். நீ தயார் தானே!"

எதிர்பாராத முறையில் என் திட்டத்தைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டாள். அவளுடைய விழிகள் அகல விரிந்தன. வளைந்த கோடுபோன்ற கருத்த புருவமிரண்டும் நெற்றியில் ஏறியது. ஓசையுடன் அவள்மூச்சை இழுத்து விட்டாள். ஈரம் காய்ந்திருந்த உதடுகள் சிறிதே அசைந்தன.

"என்ன சுமதி?"

"உம்......"

"நீ தயார்தானே?"

அவள் என்னைப் பார்த்தாள். ஆனால், அந்த பார்வை திடீரென்று கீழே விழுந்தது.

ஏன்? அதன் காரணம் புரியாது நான் கலங்கினேன்.

சிறிது நேரம் அமைதியாக இருந்தோம். எதிரிலிருக்கும் கடல் இடைவிடாது சப்தித்துக் கொண்டிருந்தது. மேல் வானிலிருந்த ஒளிவெள்ளம்குறைந்து கொண்டிருந்தது.

"சுமதி?"

பேசாது, என்னைப் பார்த்தாள் சுமதி.

"சுமதி, உன் உள்ளத்தை என்னிடம் மறைப்பது நியாயமா? உண்மையைச் சொல்."

"சொல்லட்டுமா?"

"சொல்லட்டுமா, இதென்ன

கேள்வி சுமதி? நான் என்ன, உனக்குப் பழக்கமில்லாத, உன் நெஞ்சு உணராத புதுமனிதனு? நாம், ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, ஏறக்குறைய, ஒரு வருஷம் ஆகப்போகிறது. அப்படி இருந்துமா இந்த சந்தேகக் கேள்வி!"

"வாசு'—கூப்பிட்டு விட்டு, அவள் இதழ்கள் மூடிக்கொண்டன.

"பேசு சுமதி, பேசு. உன் இதயத்திலிருந்து வருவதை தடை செய்யாதே."

"வாசு?"

"என்ன சுமதி?"

"என்னுல் இந்த ஜென்மத்தில், உங்களை மறக்க முடியாது வாசு."

நான் வாய்திறந்தேன், உதடுகள் நடுங்கியபடி அசைந்தன, ஆனுல் பேச்சு பிறக்கவில்லை. தொண்டை அடைத்தது, நாக்கு நகரவில்லை.

"உண்மைதான் வாசு."

நான் மௌனமாக இருந்தேன்.

"வாசு"—சுமதி அழுதாள்.

என்ன சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை. அங்கு உட்கார்ந்திருக்க, அவள் அருகில் இருக்க, அவள் சொல்வதைக் கேட்க, கேட்டு விட்டுப் பதில் சொல்ல எனக்குப் பிடிக்கவில்லை. ஆனுல், எழுந்து போகவும் சக்தியற்றவனுக இருந்தேன்.

"வாசு, நான் எனக்காக வருந்தவில்லை. ஆனுல், உங்கள் கனவை அழித்துவிட்டேன் என்பதை எண்ணும் போதெல்லாம் என் மனம் சுக்குநூருய் வெடித்துச் சிதறுகிறது."

என்னுல் வாய் திறந்து, ஒரு சொல் பேசவும் இயலவில்லை.

"வாசு, நாமிருவரும் ஒரே இடத்தில் வேலை பார்க்கிருேம், சம்பாதிக்கிருேம் அதை வைத்துக்கொண்டு ஆனந்தமாக வாழலாம் என்று நீங்கள் அடிக்கடி சொல்வீர்கள். நானும், அதை வைத்துக்கொண்டு, எதிர்காலத்தைப்பற்றி ஆயிரக் கணக்கில் கோட்டைகட்டி அகமகிழ்ந்திருந்தேன்."

நான், அவள் சொல்வதை கவனமாக, எதிர்ப் பேச்சின்றி கேட்டுக் கொண்டிருந்தேன். வேறு எதுவும் செய்ய என்னுல் முடியவில்லை.

"வாசு, நான் சம்பாதிக்கும் எண்பது ரூபாய்தான், என்னை உங்களுடன் சேரவிடாமல் தடுத்திருக்கிறது."

கண்களைத்தூக்கி, பார்வையை நிலைகுத்தி அவளைக் கவனித்தேன்.

"சொல்கிறேன், கேளுங்கள் வாசு. எங்கள் குடும்பம் பெரியது. நான், அப்பா, அம்மா, பாட்டி, என் இரண்டு தங்கைகள், ஒரு தம்பி—இவ்வளவு பேரையும் கொண்ட குடும்பத்திற்கு என் அப்பாவின் சம்பளம், அந்த நூற்றைம்பது போதுமா?

நான் மூச்சை இழுத்துவிட்டேன்.

"என்சம்பளம், குடும்பத்திற்கு எவ்வளவு பெரிய உதவி செய்யும் என்பதை உங்களால்புரிந்து

தமிழ் நாட்டில் சோவியத் தலைவர்கள்
இளநீர் ருசி பார்க்கிறார்கள்.

கொள்ள முடியாதா, வாசு." பேச்சை நிறுத்தி, இரண்டொரு நிமிஷம் அமைதியாக இருந்து விட்டு, மறுபடியும் அவள் ஆரம்பித்தாள். "கல்யாணம் செய்து கொண்டால், அதன் பின், குடும்பத்திற்கு எப்படி என்னால் உதவ முடியும்?"

"சுமதி?"-என்னால் பொறுக்க முடியவில்லை, கத்திவிட்டேன்.

"வாசு"— சொல்லி விட்டு அவள் எழுந்திருந்தாள்.

முயற்சி செய்தும், இருந்த இடத்திலிருந்து எழுந்திருக்க என்னால் முடியவில்லை.

"போகிறேன் வாசு, போகிறேன் நான்." பொங்கும் அழுகையை அடக்கிக் கொண்டே அவள் பேசினாள். அடி எடுத்தும் வைத்து விட்டாள். தள்ளாடிக் கொண்டே நடந்தாள்,

என் கண்ணிலிருந்து, கண்ணீரால் தடுக்கப்படும் பார்வையிலிருந்து விலகிச் செல்லும் சுமதியை, விரைவில் மறையப் போகும் அவள் உருவத்தை, சிலையாக யிருந்து பார்த்துக்கொண்டிருந்தேன்.

டிக், டிக், டிக். தொடர்ந்து, ஒழுங்காக ஓசை வந்துகொண்டிருந்தது. வினாடி முள்ளின் ஓட்டம், நிமிஷ முள்ளின் அசைவு, மணி முள்ளின் நிற்பதுபோன்ற நிலை—பெருமூச்சு விட்டுக் கொண்டே பார்த்தேன். ★

கலை உலகம்

டவுன் பஸ்

காலியாகத் திரிந்தவன் ஒரு பெண்ணால் யோக்கியனாக மாறி பெரிய மனிதனாகிறான்! ஆனால் வசதி வந்ததும் தன் மனைவியை மறந்து மற்றொருத்தியிடம் உறவு கொள்கிறான். கடைசியில் தன் மனைவியினாலேயே ஆபத்தினின்றும் காப்பாற்றப்பட்டு, பின்னர் இருவருமே நன்றாக வாழ்கின்றனர். சுருக்கமாகச் சொன்னால் இதுதான் 'டவுன் பஸ்' கதை!

ஆட்டோ ரிக்ஷா ஓட்டி அதிலிருந்து சம்பாதித்து 3 வருஷத்தில் பல பஸ்களுக்கு 'முதலாளி'யாகிவிடுகிறான் என்பதை படப்பிடிப்பாளர்கள் நம்மை நம்பச் சொல்கிறார்கள்! யதார்த்த வாழ்க்கைக்கும் இந்த படத்திற்கும் எவ்வளவு 'சம்பந்தம்' என்பதை கதாசிரியர் நாகராஜன் தான் சொல்லவேண்டும். வாழ்க்கையில் சமாளிக்கவேண்டிய அத்தனை வளைவு சுளிவுகளையும் விட்டு குறுக்கு வழியில் எப்படிப் பெரிய மனிதனாவது என்பதைப்பற்றித்தான் 'கலைஞர்'களால் சிந்திக்க முடிகிறது போலும்!

நடிகை அஞ்சலிதேவி, துடுக்கான பஸ் கண்டக்டராகவும், பின் அடக்கமான குடும்பப் பெண்ணாகவும் நன்றாக நடித்திருக்கிறார். இரண்டு மூன்று இடங்களில் கண்ணப்பாவின் நடிப்பு நன்றாக இருக்கிறது. பல இடங்களில் ஏனோ சுவாரஸ்யப்படவில்லை. இன்னும் அவர் நடிப்பில் முன்னேறவேண்டும்! கதாநாயகனின் தந்தையாக வி. கே. ராமசாமி நல்ல முறையில் நடித்திருக்கிறார். மகன் வீட்டிற்குப் போகமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தவர் கடைசியில் அங்கு போனதும் அவர் படுத்தும் அமர்க்களம் நன்றாகவே இருக்கிறது. எம். என். ராஜம் நடிப்பு குறைவில்லாமலிருக்

கிறது. டி. கே. ராமச்சந்திரன் நடிப்பில் புதுமையில்லை. முத்துலெக்ஷ்மியும் கருணாநிதியும் கொஞ்சநேரம் "கிசுமுசு" மூட்டிவிட்டுப் போகிறார்கள். அங்கமுத்து, பி.டி. சம்பந்தம் இருவரின் 'தமாஷ்' காட்சிகளை ரசிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது!

'சிட்டுக்குருவி' பாட்டைத் தவிர வேறெதுவும் உதட்டை அசைக்கவில்லை. ஆனால் அதிலும்கூட அஞ்சலியின் குரலுக்கு ஏற்றாற்போன்ற பின்னணிப் பாடகியைப் பொறுக்கியிருக்கலாம்.

படத்தில் 'விறுவிறுப்பு' குறைவு. அஞ்சலிதேவி வரும் காட்சிகளில் பஸ் ஓடுகிறது. மற்ற நேரங்களில் பஸ் நகருகிறது!

மொத்தத்தில் அஞ்சலியின் நடிப்பிற்காகவாவது ஒருமுறை பார்க்கலாம்.

டாக்டர் சாவித்திரி

ஒரு கொலை நடக்கிறது. அதை யார் செய்திருக்கமுடியும் என்று கேள்விக் குறியைப் போட்டுவிட்டு அதற்கு விடை காண முயன்றிருக்கிறார்கள். கடைசி வரையில் யார் கொலை செய்திருக்க முடியும் என்று ஊகிப்பது சிரமமாகவே இருக்கிறது. அந்த அம்சத்தைப் பொறுத்தவரையில் 'டாக்டர் சாவித்திரி'யைப் பாராட்ட வேண்டியதுதான்.

உபாத்தியாயினியாகப் போகும் எல்லோரையும் பெற்றோர்களின் கையெழுத்து இருந்தால் தான் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொள்வோம் என்று எங்கேயும் சொல்வதாக நான் கேள்விப்பட்டதில்லை. கதாசிரியருக்குத் தெரிந்த பள்ளிக்கூடம் (அதுவும் செங்கற்பட்டில்!) அப்படிப்பட்டதோ என்னவோ! டாக்டர் சாவித்திரி தற்கொலை செய்துகொள்ளப் போகும் சமயத்தில் 'கடவுள்' தகப்பனார் உருவத்தில் காட்சியளித்து, காப்பாற்றுகிறார் என்று வரும் கட்டம் இக்கால வளர்ச்சிக்கு ஏற்றதாக இல்லை! அவள் மனச்சாட்சியே அவளுக்கு அறிவுறுத்துவதாகக் காட்டியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஒரே ஊரில் டாக்டராக இருக்கும் சாவித்திரி அதே ஊரிலுள்ள இன்னொரு டாக்டரிடம் சாவித்திரியை 'சபீதா' என்று வைத்துக்கொண்டு புடவைக்குப் பதிலாக பைஜாமாவும் மேல்துண்டும் அணிந்துகொண்டு, மேலுக்கு ஒரு கண்ணாடியையும் மாட்டிவிட்டால் மாறிவிடுகிறாள் என்று சொல்வது நம்பக்கூடியதாக இல்லை!

எந்த வேஷத்தைக் கொடுத்தாலும் கொஞ்சமும் தோஷமின்றி ஏற்று நடிக்கும் திறமையுள்ள அஞ்சலிதேவி இதில் பல வேஷங்களில் தோன்றுகிறார்.

அந்தந்த வேஷங்களிலும் நன்ருகவே நடித்திருக்கிருர். குறிப்பாக 'மகமாயி' வேஷத்தில் அவர் நடிப்பும் பேச்சும் பிரமாதம்! நம்பியார் நடிப்பு தரமாக இருக்கிறது. எம். என். ராஜம் நடிப்பும் அப்படியே. சாமாவின் இரண்டு வேஷங்களும் பரவாயில்லை. பந்துலு, டாக்டரின் கணவனுக அமைதியாக நடித்திருக்கிருர். எஸ். பாலச்சந்தர் ஏதோ நடிக்கிருர். என். எஸ். கிருஷ்ணன், கருணாநிதி இருவரும் சேர்ந்து நடத்தும் 'கூத்தடிப்பு' அவசியமற்றது.

பிரபலமான பின்னணிப் பாடகர்கள் பலர் பாடியிருந்தபொழுதிலும்கூட எந்தப் பாட்டும் எடுப்பாக இல்லை.

மொத்தத்தில் படம் சாதாரணமானதுதான்!

கோடீஸ்வரன்

நட்சத்திரக் குவியல்தான். எனினும் வெற்றிப்படம் என்று சொல்லமுடியாத நிலையில் சாதாரணப் படங்கள் பட்டியலிலே விரைவாகச் ஓடி சேர்ந்து கொள்கிறது 'கோடீஸ்வரன்'.

'வரதட்சிணை'க் கொடுமையை நகைச்சுவையாலேயே கண்டிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட படம்தான் கோடீஸ்வரன். ஆனல் அந்த எண்ணத்தில் எவ்வளவு வெற்றி பெற்றிருக்கிருர்கள் என்பதைப் படம் பார்ப்பவர்கள்தான் சொல்லவேண்டும்.

இந்தப் படத்தில் நடிப்பைவிட அதிகமாக பத்மினி நடனமாடுகிருர். சிவாஜி கணேசன் தனக்கே உரித்தான தொண்டையினுல் பலஇடங்களில் கத்துகிருர். இருவரின் நடிப்புமே மிகையாக இருக்கிறது. கதாநாயகனுகத் தோன்றும் ஸ்ரீராம் நடிப்பு பரவாயில்லை. ராகினி நடிப்பில் முன்னேறியிருக்கிருர் என்றுதான் சொல்லவேண்டும் படத்தின் 'பிரதான' பாத்திரமான தங்கவேலு வழக்கம்போலவே நன்ருக நடித்திருக்கிருர். கணக்கப்பிள்ளையாக நடிக்கும் சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன் சபாஷ் பெறுகிருர்! பைத்தியக்கார ஆஸ்பத்திரி டாக்டராக பாலச்சந்தர் நடிக்கிருர். பைத்தியக்கார ஆஸ்பத்திரி டாக்டரும்கூட பைத்தியமாகத்தான் இருக்கவேண்டும் என்ற கற்பனை, ஆசிரியருக்கு எப்படித்தான் உதித்ததோ? இதில் பாலச்சந்தரைப் பார்க்கும்பொழுது 'ஐயோ' என்று அனுதாபப்படவேண்டியிருக்கின்றது

பாட்டுக்கள் கேட்கும்பொழுது சுமாராக இருக்கின்றன. ஆனல் ஒன்றுகூட நினைவில் நிற்கக்கூடியதாக இல்லை.

மொத்தத்தில் கோடீஸ்வரன் நல்ல ஏமாற்றத்தைத்தான் தருகிருன். —என். பாஸ்கரன்.

வெட்சியும் கரந்தையும்

[எஸ். ராமகிருஷ்ணன்]

3

வெட்சித் திணைக்குரிய வேடர்களின் வாழ்வை, பழைய தமிழ்நூல்களின் துணை கொண்டு ஒருவாறு அறிந்தோம். அடுத்து, கரந்தைத் திணைக்குரிய கோவலர்களின் வாழ்வை அறிய, பண்டையத் தமிழ் இலக்கியங்களின் உதவியை நாடுவோம்.

கோவலர் (அல்லது இடையர் அல்லது ஆயர்) கால் நடை வளர்ப்பைத் தொழிலாகக் கொண்டவர்கள். அவர்களது ஆநிரைகளை வேடர்கள் கவர்ந்து செல்வதே வெட்சி ஒழுக்கம். அந்த ஆநிரைகளை மீட்க அந்தக் கோவலர் எடுக்கும் முயற்சிகளே கரந்தைத் திணையின் பொருளாகும். கரந்தைத் திணையின் பழைய இலக்கணத்தைப் புறப்பொருள் வெண்பாமாலையிலிருந்து (பு. வெ.) அறியலாம். சங்க நூல்களில் கரந்தையாரைப் பற்றிப் பல பாட்டுக்களும் குறிப்புக்களும் உள்ளன.

கரந்தை அரவம்

வேடர்கள் இரவில் தம்மூர் வந்து, காவலர்களைக் கொன்று ஆநிரைகளைக் கவர்ந்து சென்றதைக் கேட்டுக் கரந்தையார் தாம் செய்துகொண்டிருந்த தொழிலை அப்படியே விட்டுவிட்டுக் கொதித்தெழுகின்றனர். இதைக் கரந்தை அரவம் என்று பு. வெ. கூறும்.

"காலார் கழலார், கடுஞ்சிலையார், கைக்கொண்ட
வேலார், வெருவந்த தோற்றத்தார்—காலன்
கிளர்ந்தாலும் போல்வார், கிணைப்பூசல் கேட்டே
உளர்ந்தார் நிரைப் பெயர்வுமுண்டு."

[கழலார்-(காலில்) வீரக்கழல் அணிந்தவர். கடுஞ் சிலை-வலிய வில். வெருவந்த-அச்சுறுத்தும். கிணைப்பூசல்-கிணைப் பறையின் ஓசை. உளர்ந்தார்-நகர்ந்தார்]

கிணைப் பறையின் ஒலியைக் கேட்டவுடன் அவர்கள் காலில் கழலுடன், வில்லும் வேலும் தாங்கியவர்களாக, யமனைப் போலக் கோபித்தெழுகின்றனர்; அவர்களைக் கண்டாலேயே எவரும் அஞ்சுவர். இவ்வாறு கரந்தையார் போருக்குக் கிளம்புவதைக் கண்ட ஒரு புலவர் பின்வருமாறு பாடுகிறார்:—

"அடியதிர் ஆர்ப்பினர், ஆபெயர்த்தற் கன்று
கடிய மறவர் கதழ்ந்தார்—மடிநிரை
மீளாதுமீளார் விறல்வெய்யோர் யாருங் கோல்
வாளார் துடியர்வலம்."

(புறத்திரட்டு-763)

[ஆர்ப்பினர்-பேரொலி செய்கிறவர். ஆபெயர்த்தற்கண் -

பசுக்களை மீட்க. கடியமறவர்-கொடிய வீரர். கதழ்ந்தார் – விரைந்தார். மடி நிரை-பால் மாடுகள். விறல்வெய்யோர் – வெற்றியை விரும்பியவர்கள். வாளார்-வாளேந்தியவர். வலம்-வலிமை]

கரந்தையாரின் போர் முழக்கத்தையும் வலிமையையும் கண்டபுலவர், 'மடிநிரை மீளாது மீளார்'' என்றே கூறிவிடுகிறார். வெற்றியோடு திரும்ப முடியா விட்டால் அவர்கள் வீரமரணத்தையே தழுவுவர் என்பது குறிப்பு.

இடையர்கள் அனைவருமே போருக்குச் செல்வரோ? "ஆற்றார் ஒழிய" (முடியாதவர்கள் நீங்கலாக) பிறர் செல்வதாக பு. வெ. சூத்திரம் (2-24) கூறும்.

கரந்தையார், பசுக்களின் குளம்புகள் பதிந்த பாதையைத் தொடர்ந்து, கொம்பை ஊதிக் கொண்டும் துடியை முழக்கிக் கொண்டும் ஆரவாரம் செய்தவராய் விரைகின்றனர். வழியில் அவர்களுக்கு ஒரு உளவு கிடைக்கிறது. பசுக்களை கரந்தையார் மீட்க வந்தால், அவர்களைத் திடீரென்று தாக்குவதற்காக, வெட்சியாரில் சிலர் காட்டில் மறைந்திருப்பதாக அவர்கள் அறிகின்றனர். இதையே

"இலைபுதை பெருங்காட்டுத்தலை கரந்திருந்த
வல்வில் மறவர் ஒடுக்கம் காணாய்
செல்லல் செல்லல்''

என்று புறம் (259) குறிபிடும்.

[கரந்திருந்த - ஒளிந்திருக்கும்; ஒடுக்கம் - மறைவிடம்.]

"தழையால மூடிய பெருங் காட்டில் வெட்சியார் ஒளிந்திருக்கும் மறைவிடத்தைக் காணமல் செல்லாதே! செல்லாதே!" என்பது இதன் பொருள்.

இறுதியில், கரந்தையார் வெட்சியாரைக் கண்டு அவர்களைச் சூழ்ந்து போர் புரிகின்றனர். அவர்கள் புலி, சிங்கம், யானை ஆகியவற்றுக்கு ஒப்பாகப் போரிடுவதாக பு. வெ. கூறும். கரந்தையார் ஆண்மை மிகுந்தவர்கள். வெட்சியாருடன் போராடி வெற்றி காணும் வீரர்கள். தமது முகத்திலும் மார்பிலும் ஏற்பட்ட புண்களிலிருந்து உதிரம் பெருகியோடுவதைக்கண்டு மகிழ்கிறார்கள்.

நிரையை மீட்க முடியாமல், கரந்தையார் தோல்வியுற்றுத் திரும்புவதும் உண்டு. அப்பொழுது ஒரு கரந்தை வீரன் தன்னந் தனியனாக நின்று போராடுவான். எதிரியின் ஆயுதங்களால் தன்உடலில் புண் ஏற்படுவதைக்கண்டு இன்புற்று, துடிவிம்மக் கூத்தாடுவான். பகைவர்களின் தலைகளைக் கொய்ததீரன், அவர்களுடைய உடலைக் கிழித்து, குடலை எடுத்துக் கழுத்தில் மாலையாகப் போட்டுக்கொண்டு துடிவிம்மக் கூத்தாடுவான். இதையே

"கூடலர் குடர்மாலை சூட்டி
வேல்திரித்து விரும்பி ஆடின்று''

என்று பு. வெ. சூத்திரம் (2-30) குறிப்பிடும்.

[கூடலர் - பகைவர். வேல் திரித்து - வேலைச் சுழற்றி.]

வெட்சியாருடன் நடக்கும் போரில் வெற்றி நிகழ்ந்தாலும் தோல்வி ஏற்பட்டாலும், கரந்தையாரில் சிலர் அல்லது பலர் வீர மரணம் அடைவர். அவ்வாறு வீரமரணம் அடைந்தவருக்கு இடையர் நடுகல்லை நிறுவிச் சிறப்புச் செய்தனர். வெட்சித் திணைக்குரிய வேடர்கள் இந்த முறையைக் கடைப்பிடிக்கவில்லை. வீரருக்குக் கல்நட்டு வழிபடும் முறையை இடையர்களே முதலில் கண்டனர்.

போரில் வீழ்ந்த வீரர்களை எண்ணி வருந்துவதைத் தெரிவிக்கும் பாடல்கள், கையறுநிலை என்ற துறைக்கு உரியவை. புறநானூற்றில் இந்தத் துறையைச் சேர்ந்த பாட்டுக்கள் ஆறு உள்ளன.

வடமோதங் கிழார் பாடிய பாட்டு (புறம்-260), வெட்சியாருடன் போராடி உயிர் நீத்த தலைவனது வீரத்தை மெச்சுகிறது.

"..........கடிது அண்மையவே
முன்னூர்ப் பூசலிற் தோன்றித்தன்னூர்
நெடுநிரை தழீஇய மீளியாளர்
விடுகணை நீத்தம் துடிபுணையாக
வென்றிதந்து கொன்று கோள்
விடுத்து........."

என்பர் புலவர்.

[கடிது அண்மையவே - மிகவும் சமீபத்தில் உள்ள. முன்னூர் - ஊர் முன்பாக, தழீஇய - கைப்பற்றிய. மீளியாளர் - வீரர் நீத்தம் - வெள்ளம். புணை - தெப்பம். கோள் - கொண்ட நிரை.]

தலைவன், தன்னூருக்குச் சமீபத்திலுள்ள ஊர் முன்னாலேயே, வெட்சியாரைச் சூழ்ந்து போராடினான். எதிரிகளின் அம்பு வெள்ளத்துக்கிடையே, தன் துடியையே தெப்பமாகக் கொண்டு அவன் முன்னேறினான். விரோதிகளைக் கொன்று, பசுக்களை மீட்டு, வெற்றி கண்டான். ஆனால் வெட்சியாரின் அம்பு அவனது மார்பில் பாய்ந்ததால், தன்னூரை நெருங்கும் பொழுது தலைவன் இறந்தானென்றும், ஊரார் அவனுக்குக் கல் நாட்டி அதற்கு மயிலின் அழகிய மயிராகிய பீலியைச் சூட்டி மரியாதை செய்தனரென்றும் புலவர் அதே பாட்டில் கூறுகிறார்.

ஆவூர் மூலங்கிழாரின் பாட்டு (261), வெட்சியாருடன் போராடிப் பசுக்களை மீட்ட தலைவன் உயிரிழந்ததை எண்ணி, அந்தத் தலைவனது கைவண்மையை அனுபவித்த பாணன் அடையும் வருத்தத்தை விவரிக்கிறது. அந்தத் தலைவனது இல்லம் "அடையாத பேரில்" (கதவை மூடியறியாத பெரிய இல்லம்); வருவோருக்கு மது வழங்குவதற்குள்ள கலயமோ 'தண்டா மண்டை' (எப்பொழுதும் நிறைந்த மண்டை); பலர் வந்து சோறு உண்டு போவதால், அவனது இல்லத்து முற்றத்தின் குறடு தேய்ந்து விட்டதால், அது 'முரிவாய் முற்றம்' ஆக உள்ளது. உலையில் நெய்யை வார்த்து ஆட்டிறைச்சியைப் பொறித்து விருந்தோம்பிய வள்

ளல்அவன். அத்தகைய வள்ளல் இறந்தானே யென்று புலம்பும் பாணன் "என் கண் சோர்க" (என் கண்கள் சோர்ந்து வீழ்வனவாக!) என்று கூறுகிருன்.

பெருகிவரும் வெள்ளத்தைத் தடுக்க முயலும் அணையைப் போல வெட்சியாரின் அம்புகளைச் சமாளிக்க முயன்று உயிர்த் தியாகம் செய்த தலைவனது தீரத்தை புறம் 263 போற்றுகிறது. இந்த ஆயர் தலைவன், முதலில் வெற்றி கண்டு பசுக்களை மீட்டுத் திரும்பி விட்டான். அப்பொழுது வெட்சியார் மீண்டும் திரண்டு வந்து அவனோடு போர் புரிந்தனர்; அவன் இறந்தான். ஊரார் அவனுக்குக் கல் நிறுவி சிறப்புச் செய்தனர். ஒரு புலவர், எதிரேவந்த பாணனிடம் இதைக் குறிப்பிட்டு, அந்தத் தலைவனது நடுகல்லை வழிபட்டுச் செல்லும்படி அறிவுறுத்துகிருர். அவ்வாறு நடுகல்லை வணங்கினல், அந்தக் கொடுங்கானத்தில் மழை பெய்து வளம் பெருகுமென்று அவர் கூறுகிருர்.

உறையூர் இளம்பொன் வணிகனரின் பாட்டு (புறம்-264) கரந்தைப் போரில் தலைவன் உயிர் இழந்ததால் ஏற்பட்ட விசனத்தை விவரிக்கிறது. ஊரார் தலைவனுக்குக் கல் நட்டு, அதை மயிலினது பீலி கொண்டு அலங்கரித்திருப்பதை இந்தப் பாட்டும் குறிப்பிடுகிறது. இந்தத் தலைவனும் ஒரு வள்ளல். "இவன் இறந்ததை அறியாத பாணர் சுற்றம் இனியும் வருவரே!" என்று இரக்கப்பட்டுப் பாடுகிருர்.

சிறுகருந்தும்பியாரின் பாட்டும் (புறம் 265) கரந்தைப் போரில் இறந்த தலைவனது வீரத்தையும் வள்ளன்மையையும் பெருமைப்படுத்துகிறது. இந்தப் பாட்டுடைய தலைவன் "ஊர் நணி யிறந்த" (அவனது ஊரிலிருந்து நெடுந் தூரத்திலுள்ள) பாழ் இடத்தில் நடந்த போரில் உயிர் துறந்தான். வெட்சியார் தமது பிரதேசத்துக்குச் சென்ற பிறகே இவனும் இவனது கூட்டமும் அவர்களை அணுகிச் சூழ்ந்துப் போராடினர் என்பது இதிலிருந்து பெறப்படுகிறது. அவன் இறந்த இடத்தில் அவனுக்கு ஊரார் கல் நட்டு விட்டனர். "பல்லான் கோவலர் படலை சூட்டக்" கல்லாயினுன் தலைவன்.

[பல்லான் - பல பசுக்களை உடைய. படலை - இலைமாலை.]

கரந்தைப் போரில் வெஞ்சமர் செய்து வீரன் இறந்ததை நேரில் கண்டவர், அந்த வீரனது தாய்க்குக் கூறியதாக அமைந்திருக்கும் பாட்டு (270) கழாஅத் தலையார் என்ற சான்ருேர் பாடியது. இந்தப் போர் வெட்சியாரின் ஊரிலேயே நடந்தது. "சிறுவர் தாயே, பேரிற் பெண்டே" என்று விளித்து (பேரில் பெண்டு—பெருங்குடித் தாய்), வெட்சியாரின் மன்றத்தைக் கைப்பற்றுவதற்காக நடந்த போரில், கோடரியால் வெட்டுண்டு விழுந்த மரம்போல

வாளால் வெட்டுண்டு இறந்த இளைஞனது ஆண்மையை அனைவரும் பாராட்டுவதாகப் புலவர் கூறுகிறார். இதை "நோக்குமதி நீயே" (நீயே நேரில் பார்ப்பாயாக) என்று அவர் கூறுகிறார்.

"நறுவிரை துறந்த நாரு நரைத்தலை" (நறு விரை—நறு மணப் பொருள். நாரு—மணம் வீசாத) யை உடையவள் என்று தாயைக் குறிப்பிட்டு, தாயின் முதுமையையும் சோகத்தையும் புலப்படுத்துகிறார். அவள் கண வனையும் இழந்தவள் போலும்! எனவே, நறுமணப் பொருளைத் துறந்தவளாய், அந்த நரைத்த தலையை உடைய மாது துன் புறுகிறாள்.

வெட்சியாரைப் போலவே கரந்தையாரும் வீரத்தில் சிறந் திருந்தனரென்பதும் தாய்மார் கள் தமது மக்களின் வீரத்தைப் பெரிதும் போற்றினரென்பதும் ஔவையாரின் பாட்டாலும் (286) அறிய முடியும்.

"வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்னோரன்ன இளையர் இருப்பப்
பலர்மீது நீட்டிய மண்டை என்
சிறுவனைக்
கால்கழி கட்டிலில் கிடப்பித்
தூவெள் ளறுவை போர்ப்பித் தலதே"

[வெள்யாட்டுச் செச்சை—வெள் ளாட்டுக் கிடா. மண்டை—மதுக் கலயம். கால்கழிகட்டில்—கால் இல்லாத கட்டில்; பாடை. வெள்ளறுவை-வெள்ளை ஆடை போர்ப்பித்தலது—போர்த்த வில்லை]

அவனை யொத்த இளைஞர்கள் பலர் உண்டு. வெள்ளாட்டுக் கிடாய்கள், இடையனைப் பின் பற்றுவதைப் போல, அவர்கள் தலைவனை அடி பிழையாமல் பின் பற்றும் ஒருமைக் குணத்தை உடையவர்கள். எனினும் தலை வன் மது வழங்கும்பொழுது, அவனுக்குத் தனிச் சிறப்பு செய் தான். அந்தப் பெருமைக்கு உகந்த வகையில், தன் மகன் கரந்தைப் போரில் வீர மரணம் அடையவில்லையே என்று அன்னை ஏங்குகிறாள்.

தாயைப் போலவே வீரனது மனைவியும் கணவனது வீரத் தியாகத்தில் பெருமை கொண் டதை நெடுங்களத்துப் பாணர் பாட்டிலிருந்து (291) அறிய லாம். கணவனைக் கரந்தைப் போரில் இழந்த மனைவியின் கூற்றாக அமைந்திருக்கும் பாட்டு இது. "சிறுவர்களே! பாணர் களே! துடியர்களே!" என்று விளித்துத் தன் கணவனது பிணத்தைச் சூழ்ந்து நிற்கும் கழுகு, பருந்து முதலிய பறவை களை விரட்டுங்களென்று கோரு கிறான். அவற்றின் ஆரவா ரத்தை நீக்கிவிட்டு, விளரி என்ற இரங்கற் பண்ணைப் பாடி, பிணந் தின்ன வரும் நரிகளை ஓட்டுவே னென்று அவள் கூறுகிறாள். ஊர்த் தலைவனாகிய வேந்தன், அவளது கணவனின் வீரத்தை முன்பே அறிவான். எனவே போருக்குப் புறப்படும்பொழுது, தலைவன் தனது மாலையை இந்த

வீரனுக்கு அணிவித்து, இவனுடைய மாலையைத் தான் அணிந்து கொண்டு, இவனிடம் தனக்குள்ள தன் மதிப்பைப் புலப்படுத்தினுன். இதை, கணவனை இழந்த காரிகை பெருமையுடன் குறிப்பிடுகிருள்.

'என்போல் பெரு விதுப்புறுக வேந்து' என்று கூறி, காதலனை இழந்த தன்னைப்போலவே, வேந்தனும் உள்ளம் நடுங்கும் துயரத்தை அடைந்திருப்பானென்று உணர்த்துகிருள்.

கரந்தையார் தமது வீரத்தை நேசித்ததைப் போலவே தமது தொன்மைச் சிறப்பையும் உணர்ந்து நேசித்தனர்.

"மண்திணி ஞாலத்துத் தொன்மையும் மறமும்
கொண்டு பிறர் அறியும் குடிவரவு உரைத்தன்று"

என்பது பு. வெ. சூத்திரம். (பு. வெ 2-35)

[மண்திணி ஞாலம்-மண் செறிந்த பூமி. குடிவரவு-குடி வரலாறு.]

"கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே
வாளோடு முன்தோன்றி மூத்தகுடி"

என்றே கரந்தையர் தம்மைப் பற்றிக் கூறிக் கொள்வரென்று பு. வெ. கூறும். (தொடரும்)

சரஸ்வதி

ஒவ்வொரு ஆங்கில மாதமும்
முதல் தேதியன்று வெளிவருகிறது

சந்தா விவரம்

தனிப்பிரதி 2 அணு

ஆண்டு சந்தா ரூ. 1-8-0.

தனிப்பிரதி வேண்டுவோர் மூன்றணு ஸ்டாம்பு அனுப்பிவைக்கவும்.

நிர்வாகி

சரஸ்வதி

1, ராஜா அண்ணுமலை செட்டியார் ரோடு,
வேப்பேரி :: சென்னை-7.

துட்டிக்கதைகள்

இரண்டு கட்சியிலும் இருந்தால்!

ஒருவனுக்கு இரண்டு மனைவிகள். ஒருத்தி அவனைவிட வயதானவள். மற்றவள் வயதில் சிறியவள். அவனுக்குத் தலை நரைக்க ஆரம்பித்தது. இதைப் பார்த்த இளையவள் தன் புருஷன் கிழவனாகி விட்டான் என்று ஊரார் கேலி செய்வார்கள் என்று நினைத்தாள். அதனால் அவன் தலையிலுள்ள நரைத்தமயிர்களை அவள் பிடுங்க ஆரம்பித்தாள். தன் புருஷனைவிட, தான் அதிக வயதானவள் என்று மற்றவர்கள் நினைக்கக் கூடாதே என்று மூத்த மனைவி நினைத்தாள். அதனால் அவள் புருஷனின் தலையிலுள்ள கருப்பு மயிர்களைப் பிடுங்கி வந்தாள். இவர்கள் இருவரின் கைங்கரியத்தால் புருஷனின் தலை சீக்கிரத்தில் மொட்டையாயிற்று,

* * *

கெட்டிக்காரன் புளுகு

ஒரு நாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் உட்கார்ந்திருந்தது. காலை நேரம் வெகு ரம்மியமாக இருந்ததால்உற்சாகமாக சேவல் கூவியது. பல தடவை கூவியது. இதைக் கேட்டு நரி ஒன்று அங்கு வந்தது. நரி பசியாக இருந்தது. ஆனால் சேவல் மரத்தின் மீது இருந்தபடியால், அதைப் பிடிக்க முடியவில்லை. இதற்காக அது ஒரு தந்திரம் செய்ய நினைத்தது. உடனே சேவலைப் பார்த்து "அண்ணே வணக்கம்! ஒரு நல்ல செய்தியைக் கேள்விப்பட்டாயா? பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது. அன்பாய் நடந்து கொள்ள வேண்டும். சகோதரப்பான்மையை வளர்க்க வேண்டும். நீ கீழே இறங்கி வாயேன். சந்தோஷமாக இந்தச் செய்தியைப் பற்றிப் பேசுவோம்" என்றது.

நரியின் தந்திரப் பேச்சை சேவல் புரிந்து கொண்டது. ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப் போலத் தலையைத் தூக்கிப்பார்த்தது. இதைக் கண்ட நரி, "ரொம்ப அக்கரையாக, எதையோ பார்க்கிறாயே, அங்கே என்ன விஷேசம்?" என்று கேட்டது.

"அங்கே சில வேட்டை நாய்கள் வருவது மாதிரித் தெரிகிறது. வேட்டை நாய்கள்

ஈசாப்

தானு என்பதைக் கவனிக்கிறேன்" என்று சேவல் பதிலளித்தது. இதைக் கேட்ட நரி, "அப்படியானல் நான் போய் வருகிறேன்" என்று சொல்லிக் கிளம்பியது.

இதைக் கண்ட சேவல், "போகாதே, போகாதே! இதோ நான் கீழே வருகிறேன். நாயைக் கண்டு ஏன் பயப்படுகிருய். இப்பொழுதுதான் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னுயே!" என்று சொல்லித் தடுத்தது.

"அந்த ஒப்பந்தத்தைப்பற்றி அநேகர் இன்னும் கேள்விப்பட்டிருக்க மாட்டார்களே, அந்த நாய்களுக்குத் தெரியாமல் இருந்தால் என் கதி என்னுவது? நான் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே நரி ஓட்டம் எடுத்தது. சேவல் சிரித்தது.

* * *

சுயநலமிகளின் கதி

ஒருவன் தன் குதிரையையும் கழுதையையும் ஓட்டிக் கொண்டு போனுன். குதிரை மீது பாரம் எதுவும் இல்லை. அது குஷியாகப் போனது, ஆனுல், எஜமானன் கழுதைமீது நிறையப் பொதியை ஏற்றியிருந்தான். அதைத் தாங்க முடியாமல் கழுதை வருந்தியது. தன் பாரத்தில் கொஞ்சம் வாங்கிக் கொள்ளும்படி குதிரையைக் கெஞ்சியது. குதிரை மறுத்து விட்டது. கொஞ்ச தூரம் போனதும் கழுதை கீழே விழுந்து மாண்டது. உடனே கழுதைமீது இருந்த பாரம் பூராவையும் எஜமானன் எடுத்து குதிரைமீது ஏற்றினுன். பாரம் மட்டுமல்ல; கழுதையின் தோலையும் சுமக்கும்படி குதிரை மீது வைத்தான்.

* * *

அவரவருக்கானது

ஒரு காலத்தில் பிராணிகளுக்கும் பறவைகளுக்கும் யுத்தம் மூண்டது. யுத்த ஏற்பாடுகளைச் செய்வதற்காக தன்னுடைய குடிகள் எல்லோரும் மைதானத்தில் வந்து கூடவேண்டுமென்று சிங்கம் உத்தரவு இட்டது. எல்லாப் பிராணிகளும் கூடின. அவற்றில் கழுதைகளும் முயல்களும் யுத்தத்திற்கு உபயோகமில்லை என்றும் அவற்றைப் போகச் சொல்லிவிட வேண்டும் என்றும் சிங்கத்தின் தளபதிகள் கூறின. ஆனுல் சிங்கம் அதை ஒப்புக் கொள்ளவில்லை. "அவசரப் படாதீர்கள்! கழுதைகளைப் போல சிறப்பாக எக்காளம் ஊதுபவர்களைக் காண முடியாது. முயல்களைப் போல சிறந்த தூதர்களையும் பார்க்கமுடியாது" என்றது சிங்கம்.

* * *

அமைதி வென்றது

தங்களுக்குள் யார் பலசாலி என்று ஒருநாள் காற்றும் சூரியனும் விவாதித்தன. அந்த சமயத்தில் தெரு வழியாக ஒரு மனிதன் போய்க் கொண்டிருந்தான். அவன் மேலே போர்த்தி யிருக்

கிற துணியை யாரால் எடுக்க முடிகிறது என்று சோதித்துப் பார்த்து விடுவது என்று தங்களுக்குள் முடிவு செய்தன. முதலில் காற்று பலமாக வீசித் துணியைப் பிடுங்க முயற்சித்தது. காற்று பலமாக அடிக்க அடிக்க அந்த மனிதன் மேல்வேட்டியை இறுக்கப் பிடித்து உடம்பை மூடினன். காற்றின் வேகம் பலிக்கவில்லே.

சூரியன் தன் வேலேயை ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாக உஷ்ணம் அதிகரிக்கவே அந்த மனிதன் உஷ்ணத்தைத் தாங்க முடியாமல் மேல் வேட்டியை அப்புறப்படுத்தி மர நிழலுக்கு ஓடினன்.

*　　*　　*

அனுபவசாலி

ஒரு இடையன் தன் ஆடுகளை கடற்கரைப் பக்கம் மேயவிட்டான். ஒரு குன்றின்மீது ஏறி உட்கார்ந்துகொண்டு கடலேப் பார்த்தான். நீல நிறத்தில் சாந்தமாகவும் அழகாகவும் கடல் விளங்கியது. அதில் போய்க் கொண்டிருந்த படகுகள் ரம்மியமாக இருந்தன.

"நானும் ஏன் ஒரு படகில் ஏறிப் போகக் கூடாது? பல நாடுகளுக்குச் செல்லலாம். பல விசித்திரங்களேப் பார்க்கலாம். அமைதியான இந்தக் கடலில் படகில் போவதில் ஆபத்து ஒன்றும் இல்லே. வியாபாரம் செய்தால் நல்ல லாபம் வரும். அதைக்கொண்டு சிறப்பாக வாழலாம்" என்று அந்த இடையன் நினைத்தான்.

அவன் தனது ஆடுகளை விற்ருன். அந்தப் பணத்தைக் கொண்டு பேரீச்சம்பழம் வாங்கினன். பிரயாணம் ஆரம்பித்தான். படகு, கொஞ்ச தூரம் போனதும் அமைதியாக இருந்த கடலில் திடீரென்று கொந்தளிப்பு ஏற்பட்டது. படகைக் காப்பாற்றுவதற்காகப் பாரத்தைக் குறைக்க வேண்டியதாக இருந்தது. பேரீச்சம் பழ மூட்டைகளை ஒவ்வொன்ருய்க் கடலில் தூக்கி எறிந்தான். எல்லா மூட்டைகளும் போய்விட்டன. அப்புறமும் படகைச் சரியாக நடத்த முடியவில்லே. ஒரு பாறைமீது மோதி, துண்டுதுண்டாய் உடைந்து போயிற்று. ரொம்பச் சிரமப்பட்டு இடையன் உயிர் தப்பினன். ஊருக்கு வந்ததும் யாரிடம் தன் ஆடுகளை விற்ருனே அவனிடமே அதே ஆடுகளை மேய்ப்பதற்குக் கூலிக்கு அமர்ந்தான். மிகவும் சிக்கனமாக வாழ்ந்து மீண்டும் ஆடுகளை வாங்கினன். எந்த இடத்தில் கடலின் அழகு அவனைக் கவர்ந்ததோ அதே இடத்தில் ஒருநாள் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்தான், கடற்கரையில் நின்று அலே பாயும் கடலேப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு அலே வந்து அவன் காலேத் தொட்டது. உடனே அந்த இடையன் "அட, எத்துவாளிக் கடலே! என்னே என்ன கழுதை என்ரு நினைத்துக் கொண்டாய்? உனக்கு இன்னும் பேரிச்சம்

சென்னையில் சோவியத் தலைவர்கள்
தோழர் குருஷேவும், ராஜாஜியும் விவாதிக்கின்றனர்,

பழம் வேண்டும் என்று ஆசை யாக இருக்கிறதோ? சரி, சரி, வேறே மடையன் யாரையாவது பார், போ போ" என்று சத்த மிட்டான்.

* * *

வேலை செய்யாவிட்டால்...?

வெயில் காலம் பூராவும் பாடிக் கொண்டே வெட்டுக் கிளி காலம் கழித்தது. மழைக் காலம் வந்தது. வெளியே போய் உணவு தேட முடியவில்லை, பசியால் வருந்தியது. குளிரும் வாட்டியது. வெயில் காலத்தில் உணவு சேர்த்து வைத்துக் கொண்டு சௌக்கியமாய் வாழ்ந்து வந்த எறும்புகளிடம் போயிற்று. கொஞ்சம் உணவு கொடுக்கும்படி கெஞ்சியது. "உனக்கு நன்ருக வேண்டும். வெயிற்காலத்தில் என்ன செய்துகொண்டிருந்தாய்?" என்று எறும்புகள் கேட்டன.

"இரவும் பகலும் பாடிக் கொண்டே இருந்தேன்" என்று பதிலளித்தது வெட்டுக்கிளி.

"ஓகோ! பாடிக்கொண்டா இருந்தாய்! அப்ப சரிதான். இப்ப ஆடிக்கொண்டிரு. நாங்கள் ஒன்றும் கொடுக்கப்போவதில்லை. போய் நன்ருக ஆடு" என்று சொல்லி எறும்புகள் வெட்டுக்கிளியை விரட்டி விட்டன. ★

மாக்ஸிம் கார்க்கி

◆◆

[எஸ். வேலாயுதம்]

◆◆

பத்தொன்பது வருடங்களுக்கு முன்னுல் 1936ம் வருடம் ஜூன் மாதம் 18ம் நாள். மனித வர்க்கத்தின் முற்போக்குச் சக்திகளனைத்தும் துக்கத்திலாழ்ந்தன. சோவியத் இலக்கியத்திற்கும் உலக இலக்கியத்திற்கும் ஈடு செய்ய முடியாத நஷ்டம் ஏற்பட்டது. அன்றைய தினம் சோவியத் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர், சோவியத் இலக்கியத்தின் மூலபுருஷர், மனித வர்க்கத்தின் சுபிட்சத்திற்கும், உலக சமாதானத்திற்கும் சலியாது பாடுபட்ட மேதை மாக்ஸிம் கார்க்கியின் இதய ஓட்டம் நின்றது.

ருஷ்ய இலக்கியம், புஷ்கின், கொகல், டால்ஸ்டாய், செகாவ், ஆஸ்ட்ராவ்ஸ்கி மற்றும் பல தலைசிறந்த எழுத்தாளர்களை உலகிற்கு நல்கியது. இவர்களது புகழ் உலகெங்கும் பரவியுள்ளது. சீரிய கலைஞர்கள் என்ற வார்த்தைக்குப் பொருத்தமானவர்களின் பட்டியலிலே, எல்லாருக்கும் சரிநிகர் சமானமாக கார்க்கியும் மிளிர்கிருர். தனது அழியாத சிருஷ்டிகள் அனைத்திலும் கார்க்கி ருஷ்ய இலக்கியத்தின் மகோன்னத பாரம்பர்யத்தை உணர்த்திஞர். கலையிலும் இலக்கியத்திலும் பிண்டப்பிரமாணமான உண்மைகளைப் புகுத்திய முதல்வர் மாக்ஸிம் கார்க்கிதான்.

கார்க்கி பாமர மக்களுடன் தன்னை இணைத்துக்கொண்டார். அவர்களோடொருவராக வாழ்ந்தார். அவர்களது தேவைகளையும் அபிலாஷைகளையும் நன்கு உணர்ந்திருந்தார். அவர் மக்களின் எழுத்தாளர் என்று சொல்லும்போது அந்த வார்த்தைக்குள்ள அர்த்தம் முழுமைக்கும் அவர் பொருத்தமானவர். ஆம்! கார்க்கியின் சிருஷ்டிகளில் ஒவ்வொரு வரியும், வார்த்தையும் கூட மக்களுக்காகத்தான் எழுதப்பட்டிருக்கும். கார்க்கியின் படைப்புக்கள் அத்தனையும் மக்களிடையே அமோக செல்வாக்கைப் பெற்றிருந்தன. அவரது படைப்புக்களில் ஒதுக்கித் தள்ளுவதற்கு ஒன்றுமே கிடையாது. இத்தகைய அபார சக்தி அவருக்கு எங்கிருந்து வந்தது? அவரது எண்ணங்கள் தொழிலாளி வர்க்கத்திடமிருந்தும் உழைக்கும் மக்களிடமிருந்தும்

உதித்தவை. அவர்களது நல உரிமைகளினுல் வழிகாட்டப் பட்டவை. அவர்களது புரட்சிகரமான அபிலாஷைகளினுல் நிரப்பப்பட்டவை. கார்க்கியின் சிருஷ்டிகளுக்கு மார்க்சிச உலகக் கண்ணேட்டம்தான் சிந்தனு அஸ்திவாரத்தைக் கொடுத்தது.

கார்க்கியின் நாவல்கள், கதைகள், நாடகங்கள் ஆகிய எல்லாவற்றிலும் உழைக்கும் மக்கள்தான் கதாநாயகர்களாக இருப்பார்கள். மக்களை, கலாசார சிருஷ்டி கர்த்தாக்களாகவும் உலகத்துச் செல்வங்கள் அனைத்தையும் உற்பத்தி செய்கிறவர்களாகவும் கார்க்கி பார்த்தார். அவர் தனது ஆர்வத்தையும், வார்த்தைகளையும், கற்பனைகளையும், வர்ணனைகளையும் உழைக்கும் மக்களின் வாழ்க்கையிலிருந்தும் அவர்களின் போராட்டங்களிலிருந்தும் எடுத்துக்கொண்டார். பல சகாப்தங்களாக, மக்கள் சாதித்த அரும் பெரும் சாதனைகளிலிருந்து அவர் விஷயங்களைக் கிரகித்தார்.

மனித வர்க்கத்தின் ஒளி மிகுந்த எதிர்காலத்தை உருவாக்கும் போராட்டத்தில் கார்க்கி தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். அவரது கன்னிப் படைப்புக்களிலேயே தனது மகத்தான திறமையைக் காட்டியுள்ளார். அவரது ஆரம்ப நாவல்களிலும் நாடகங்களிலும், கதைகளிலும் அவரது ஈடு இணையற்ற திறமை பொதிந்து கிடக்கின்றன. கார்க்கியின் பல பாடல்கள், மக்களை சுதந்திரப் போராட்டத்திற்கு அறைகூவி அழைத்தன. வரப்போகும் ஒரு மகத்தான புரட்சிப் புயலை அந்தப் பாடல்கள் ரீங்காரம் செய்தன.

உழைக்கும் மக்களின் போராட்டங்கள் வளர்ந்து வலுப் பெறும் போது கார்க்கியின் சிருஷ்டிகளும் வளர்ந்து வலுப்பெற்றன. ஏகாதிபத்தியத்தை வேரோடும், வேரடி மண்ணேடும் ஒழித்துக் கட்டினுல்தான் உழைக்கும் மக்கள் ஜாரின் ஒடுக்குமுறைகளிலிருந்து விடுதலைபெற முடியுமென்றும், அப்போதுதான் மனிதனை மனிதன் சுரண்டாத ஒரு பொன்னுலகைச் சமைக்க முடியுமென்றும் கார்க்கி ஆணித்தரமாக எடுத்துக் காட்டினுர். அவரது பிரசித்தி பெற்ற நூல்களான 'குழந்தைப் பருவம்' 'எனது கல்லூரிகள்' போன்ற நூல்களில் கார்க்கி சுரண்டும் அமைப்பின் ஊழல்களையும், பித்தலாட்டங்களையும் உள்ளங் கை நெல்லிக்கனியென அம்பலப் படுத்தினுர். தனது ஒப்புயர்வற்ற சிருஷ்டிகளில் அவர் ருஷ்யத் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் படம்பிடித்துக் காட்டினுர். ஜாரையும் நிலப் பிரபுக்களையும் எதிர்த்து அவர்கள் நடத்தும் போராட்டங்களை விவரித்தார். கார்க்கியின் சிருஷ்டிகள் அனைத்தும் உழைக்கும் மக்களின் மகத்தான சக்தியிலிருந்தும் அவர்களது வெற்றியிலிருந்தும் எழுந்தவை.

மகத்தான அக்டோபர் சோஷ

லிஸ்ட் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, சுதந்திர சோவியத் பூமியில் ஒரு புதிய வாழ்க்கையை உருவாக்குவதற்காக கார்க்கி தனது அறிவுப் பணியை அர்ப்பணித்தார்.

கார்க்கி சோவியத் இலக்கியத்தின் ஆரம்ப கர்த்தா. சோவியத் எழுத்தாளர்களுக்கு ஆசாஞகவும், நண்பஞகவும், வழிகாட்டியாகவும் கார்க்கி விளங்கிஞர். கார்க்கியின் சிருஷ்டிகளில் குறிப்பிடத் தக்க அம்சம், அவர் தொழிலாளி வர்க்கத்தின் சரித்திரப் பிரசித்தி பெற்ற போராட்டச் சரித்திர காவியத்தை கலையம்சத்துடன் பிரதிபலித்தார். தொழிலாளி வர்க்கம் தான் உழைக்கும் மக்களின் தலைவன் என்றும் அவர்கள் தான் கம்யூனிஸ்ட் சமூகத்தைக் கட்டும் சிற்பிகள் என்றும் அவர் எடுத்துரைந்தார்.

கார்க்கியின் செழுமை பொருந்திய சிருஷ்டிகளில் பல கோணங்களிலிருந்து எழுதிய பிரசாரக் கருத்துக்கள் முக்கிய பாத்திரத்தை வகித்தன. அவரது வாழ்க்கையின் கடைசிப் பத்தாண்டுகளில் அவர் ருஷ்யாவிலும் மற்ற நாடுகளிலும் வளர்ந்து வந்த மிகவும் சிக்கலான சமூக, கலாசார அரசியல் பிரச்னைகளைப் பற்றி முன்னூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதிஞர்; நூற்றுக்கும் மேற்பட்ட சொற்பொழிவுகள் நிகழ்த்திஞர். சோவியத் நாட்டிலும் வேறு நாடுகளிலுள்ள மக்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் ஆயிரக் கணக்கான கடிதங்கள் எழுதிஞர். இதுபோன்ற பிரசார நடவடிக்கைகளில் சமாதானத்திற்கான போராட்டத்தையும், எல்லா நாடுகளிலும் பரஸ்பரம் சிநேகத்தை வளர்ப்பதையும், ஏகாதிபத்தியம், காலனி அடிமைத்தனம், ஒடுக்குமுறை ஆகியவற்றை எதிர்ப்பதையும் பிரதான அம்சங்களாகக் கொண்டு செயலாற்றிஞர். சமாதானப் பிரியர்களையும், கலாசார ஊழியர்களையும் பல மாநாடுகளில் ஒன்று கூட்டியதின் மூலம் கார்க்கி உலகம் பூராவிலும் யுத்த எதிர்ப்பு, பாசிச எதிர்ப்பு இயக்கங்களை ஸ்தாபித்த முதல்வராகத் திகழ்ந்தார்.

ஏகாதிபத்தியவாதிகள் தங்களது ராட்சசப் பசிக்கு, உலக மக்களை மற்ருெரு கோர யுத்தத்தில் மாட்டிவிடத் திட்டம் தீட்டுவதுபற்றி கார்க்கி மக்களுக்கு சதா எச்சரிக்கை செய்து கொண்டேயிருந்தார். மற்ருெரு யுத்தம் ஏற்பட்டால் கோடிக் கணக்கான மக்களின் உயிருக்கு ஆபத்து நேரும் என்றும் நகரங்களும், கிராமங்களும் நிர்மூலமாக்கப்பட்டு மண்ணோடு மண்ணுக அழிந்துபடும் என்றும், மனிதகுல கலாசாரம் அழித்து ஒழிக்கப்படும் என்றும் கார்க்கி கூறிஞர். ஏகாதிபத்தியத்தையும், நிறவெறியையும், நாடு பிடித்து மக்களை அடிமைப்படுத்தும் நச்சரவப் பாம்புகளையும் கார்க்கி நஞ்சென வெறுத்தார். அவரது ஆரம்பகாலப் பிரசாரங்களிலேயே அவர் ஏகாதிபத்தி

யங்களை வன்மையாகக் கண்டித்தார்.

இனவெறியையும், இனவெறியர்களையும் எதிர்த்து கார்க்கி தலைவணங்காது போராடினார். அமெரிக்க நாட்டில் உழைக்கும் மக்களான நீக்ரோக்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கல்லும் கரையும் வண்ணம் கார்க்கி சித்திரித்தார். நீக்ரோக்களுக்கு இழைக்கப்படும் அநீதியைப் பற்றி எழுதும்போது அது மனித சகாப்தத்துக்கே ஒரு அவமானமான விஷயம் என்று எழுதினார். இனவெறியின் கோரத்தைப் பச்சையாக அம்பலப்படுத்திய கார்க்கி, இனவெறிக்கு ஆளான காலனி நாடுகளில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் அடிமைத் தளையை அறுத்தெறிந்துவிட்டு ஒளி மிகுந்த எதிர்காலத்தைச் சமைப்பார்கள் என்ற அவரது திடநம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்.

அமர இலக்கியங்களை சிருஷ்டித்த மேதை கார்க்கியின் சிருஷ்டிகளை உழைக்கும் மக்களும், சமாதானத்தையும், மனிதகுல முன்னேற்றத்தையும் விரும்பும் ஒவ்வொருவரும் பொக்கிஷமெனப் பாதுகாக்கிறார்கள்.

சோவியத் நாட்டில் மட்டும் கார்க்கியின் நாவல்களும், கதைகளும், கவிதைகளும், கட்டுரைகளும், 71 மொழிகளில், இரண்டாயிரம் பதிப்புக்கள் அச்சிடப்பட்டுள்ளன. கார்க்கியின் பிரசித்திபெற்ற 'அன்னை' 150 பதிப்புக்கள் வெளிவந்துள்ளன.

கார்க்கியின் நூல்கள் பல நாடுகளிலும் ஏராளமாக வெளிவந்துள்ளன. அவையெல்லாம் மேற்கு ஐரோப்பாவிலும், ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, புதிய சீனா, வீரமிக்க கொரியா, இந்தியா மற்றும் ஆசிய நாடுகளிலுள்ள மக்களினால் விரும்பப்படுகின்றன. கார்க்கியின் நூல்களைப் பற்றி சீன நாட்டின் எழுத்தாளரும், தலைவருமான, 'கோ-மோ-ஜோ' கீழ்க்கண்டவாறு எழுதுகிறார். "கார்க்கியின் இலக்கிய சிருஷ்டிகளிலிருந்து நாம் எப்படி எழுத வேண்டுமென்பதை மட்டுமல்லாது, நாம் எவ்வாறு வாழ வேண்டுமென்பதையும், போராட வேண்டுமென்பதையும் கற்றுக்கொள்கிறோம்." ஆம்! அவரது எழுத்துக்கள் நமக்கு ஒரு வழிகாட்டி.